விலை: 50.00 பக்கங்கள் : 20
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
சங்கு 25 ஒலி 323 வள்ளுவர் ஆண்டு 2055
ஐப்பசி 20 புதன்கிழமை (06.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

பாராளுமன்ற தேர்தல் 2024
7
சிவஞானம் சிறீதரன்
தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தர்மமே மறுபடியும் வெல்லும்!
யாழ் தேர்தல் மாவட்டம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
(C-110)


# என்னைக் கொல்ல சதித் திட்டம்



## பாதுகாப்பு அமைச்சுக்கு சந்திரிகா கடிதம்

(கொழும்பு) தன்னைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## சசிகலா ரவிராஜ் வாகனம் மீது தாக்குதல்



19

### மூன்று நாள் காய்ச்சல்

## துன்னாலை தெற்கில் பெண் மரணம்

(கரணவாய்)

நெல்லியடி துன்னாலையில் மூன்று நாள் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் குடவத்தை, துன்னாலை தெற்கைச் சேர்ந்த 19

8 திசையும் சூரியன்
தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)
வெளிப்படைப் பேச்சு, அரசியல் நேர்மை, பதவிக்கு விலை போகாமை
X 8
(C-114)
யாழ்–கிளி தேர்தல் மாவட்டம்
வீ.ஆனந்தசங்கரி

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!
ஊழலற்ற தூய கரங்கள்!!
X 3
சட்டத்தரணி
கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
அறிவு - ஆற்றல் - ஆளுமை
(C-112)

பாராளுமன்றத் தேர்தல்– 2024
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
யாழ்., கிளிநொச்சி மாவட்டம்
பெண்களின் வாக்கு இந்தப் பெண்ணுக்கே!
X 7
சசிகலா ரவிராஜ் BSc, Dip-in-Ed
(053)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)
X 6
சுயேட்சைக் குழு 6
டிவனியா
அகில இலங்கை தமிழ் கொடி
பெண்களுக்கான பாதுகாப்பு.
முதலீடுகளுக்கும் வேலைவாய்ப்பும்
அரசியல் உரிமைக்கான குரல்
இனி எங்கள் வெற்றியே உங்கள் வெற்றி
(060)

பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
'இரு தேசங்கள் ஒரு நாடு'
இலக்கினை அடைய
ஒற்றைத் தலைமையில்
ஓரணியாவோம்!
2
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
LLB (Hons) London
Barrister-at-Law (England & Wales)
Attorney-at-Law (Sri Lanka)
தலைவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
பொதுச் செயலாளர், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.
(C-111)
1
கனகரட்ணம் சுகாஷ்
LL.B, Attorney at Law (Srilanka)
சட்டத்தரணி,
ஊடகப் பேச்சாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
தாயகம்
தேசியம்
சுயநிர்ணயம்
9
செல்வராசா கஜேந்திரன் (BBA)
பொதுச் செயலாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களது சர்வதேச விவகாரக் குழு உறுப்பினர் (2005-2010).
முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர்.
முன்னாள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைவர்.
முன்னாள் சிரேஸ்ட மாணவர் தலைவர் - மு/ஒட்டுசுட்டான் ம.வி.
உலகத் தமிழினம் தேசிய தலைவனின் பின்னால் அணிதிரண்டு நிற்கிறது என்பதனை உலகறியச் செய்த பொங்குதமிழ் பேரெழுச்சி உழைப்பாளர்களில் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)

மத்தியில் கூட்டாட்சி!
மாநிலத்தில் சுயாட்சி!




ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (C-113)



## HARRY HOTEL (PVT) LTD
## ஹரி ஹொட்டல் (பிவிரி) எல்ரிடி

இல.328, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

### வேலை வாய்ப்பு வெற்றிடம் - ஆண்/ பெண்

- பரிமாறுபவர் / Suppliers
- கொத்து/ரைஸ் போடுபவர் / Kothu, Rice Makers
- பரோட்டா போடுபவர் / Parotta Makers
- பார்சல், உணவு விநியோகம் /parcel and food distribution
- துப்பரவு செய்பவர் / Cleaners

(2569)

**076 134 1656**


# திருகோணமலையில் மருத்துவ நிபுணரின் மனைவி கொலை

திருகோணமலை தன்வந்திரி தனியார் வைத்தியசாலையின் உரிமையாளர் மருத்துவ நிபுணர் கனேகபாகுவின் மனைவி திருமதி ஏஞ்சலின் சுமித்ரா (வயது 64) நேற்று காலை வைத்தியசாலையில் வைத்துக் கொடுரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் மரணமடைந்தவரின் சகோதரியின் கணவரான சுதர்சன் (வயது 59) என்பவரே இவரைக் கொலை செய்துள்ளார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. நேற்றுக் காலை கொலையுண்டவர் கொழும்பில் இருந்து வீடு திரும்பி அறைக்குள் சென்ற போதே கொலை செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் சடலம் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய பரிசோதனைக்காகக் கொண்டு செல்லப்பட்டது. (ம-7)


### தோட்டக்காணியுடன் வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நவக்கிரிப் பகுதியில் தோட்டக் காணியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(C-1530)

**077 327 6363**



## பராமரிப்பாளர் தேவை

வவுனியா செட்டிகுளம் அண்டிய பகுதியில் உள்ள தென்னந்தோப்பினை தங்கி நின்று பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**077 811 8948**

(C-1528)



## மணப்பெண் தேவை

- காங்கேசன்துறை. இந்து. 1988. ரோகிணி. Graduate. France citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 48 157
- சங்கானை. இந்து. 1992. விசாகம். BA (Hons), Accounting. Accountant. Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34 210
- சுன்னாகம் - உடுவில். இந்து. 1983. புனர்பூசம். Graduate Network operation engineer, USA citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 28 442
- தெல்லிப்பளை. இந்து. 1996. சித்திரை. Post Graduate in Management, Senior Advisor of newzealand Government, newzealand citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 36 133
- யாழ்ப்பாணம், Roman catholic. 1985. MSc Phd civil Engineer, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 33 943
- பருத்தித்துறை. இந்து. 1990. உத்திரட்டாதி. MSc, Ass. Director, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 30 699
- அளவெட்டி - சங்கானை. 1984. திருவோணம். BSc(Hons), Computer Network Management(UK) Electrical Engineer, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 28 933
- வறணி - சாவகச்சேரி. இந்து. 1988. மகம். BBA. ACCA, வெள்ளவத்தையில் இருக்கும் மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 29 991
- நீர்கொழும்பு - Jaffna town. இந்து. 1991. உத்திரம் CIMA Fully Qualified, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 29 780

(2556)

S.Sharma J.P
www.thaalee.com
- 077 539 3728
- 077 803 8193



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 96 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல். அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- **பார்வையிடும் நேரம்**
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (2578)

**077 814 7389, 077 986 5457**



## NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 30.09.2023 இற்கு முன்பு அடகுவைக்கப்பட்டு, கீழ்குறிப்பிடப்படும் திகதிவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 23.11.2024 தொடக்கம் 01.12.2024 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவுத் திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி | 21.11.2024 | 23.11.2024 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 2 | முல்லைத்தீவு, மல்லாவி | 21.11.2024 | 23.11.2024 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 3 | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் | 21.11.2024 | 24.11.2024 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 4 | வவுனியா | 21.11.2024 | 24.11.2024 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 5 | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை | 28.11.2024 | 30.11.2024 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 6 | மன்னார், வங்காலை | 28.11.2024 | 30.11.2024 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 7 | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் II ம் கிளை, ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, கோப்பாய் | 28.11.2024 | 01.12.2024 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வட பிராந்திய முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி

(2570)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச்சங்க சைவத்திருமுறை விழாவும் சைவசமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய இரட்ணசபாபதி திருமண மண்டபத்தில் ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(நி-8)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் அரசியல்வாதிகளே அதிகளவில் நன்மையடைந்தனர்

## முல்லைத்தீவில் பிரதமர் ஹரிணி



(முல்லைத்தீவு)

**யுத்தம் காரணமாக வட பகுதி மக்களிடமிருந்து தென்னிலங்கை மக்கள் தூரமாகியுள்ளதாகவும் இதனூடாக அரசியல்வாதிகளே அதிகளவில் நன்மையடைந்துள்ளனர் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாகவே வடக்கு மக்களுக்கும், தென்னிலங்கை மக்களுக்கும் இடையிலான தொடர்பாடல் இல்லாமல் போனது.

யுத்த காலங்களில் தென்னிலங்கை மக்கள் வடக்கினை ஒரு யுத்த களமாகப் பார்த்ததுடன், வடக்குத் தமிழ் மக்கள் தென்னிலங்கை சிங்கள மக்களை தங்களது எதிரிகளாகப் பார்த்தனர்.

இதனூடாக அரசியல்வாதிகளே அதிகளவில் நன்மையடைந்தனர். அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளையும் யுத்தம் ஏற்பட ஏதுவாக இருந்த பிரச்சினையையும் தீர்க்க முடியாதவர்களால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

தற்போது, மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமையளித்து சேவை செய்யக்கூடிய பாராளுமன்றமொன்றை அமைக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அதேநேரம், கடந்த காலங்களில் மக்களுக்கு எதனையும் செய்யாதவர்கள் தற்போது தேர்தல் காலத்தில் மக்களிடம் சென்று தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதாகக் கூறிவருகின்றனர்.

எவ்வாறாயினும், தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றி பெறுவோருக்கு மாத்திரமே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழ்.கலாசார மத்திய நிலையத்தில் நிகழ்வுகளை முன்னெடுத்தல் தொடர்பில்

## இந்தியத் துணைத் தூதுவர் - வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)


யாழ்.கலாசார நிலையத்தில் எப்படி நிகழ்வுகளை முன்னெடுத்தல் மற்றும் எப்படிப் பராமரித்தல் என்பது தொடர்பில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.



வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், இந்திய துணைத் தூதர் ஸ்ரீமான் சாய் முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் பதில் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்.மாநகர சபை ஆணையாளர், கலைத்துறை சார்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேற்று ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இங்கு இந்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு உள்ள யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தினை பராமரித்தல் மற்றும் கலாசார நிகழ்வுகளை முன்னெடுத்தல் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன்போது கலை, கலாசார, நிகழ்வுகளை நடத்துதல், உரியவாறு ஒழுங்கமைத்தல் தொடர்பிலும், சமூகத்தின் பாவனைக்கு விடுதல் மற்றும் கலாசார மத்திய நிலையத்தினைத் தொடர்ந்து இயங்குநிலையில் வைத்திருத்தல் தொடர்பிலும் உரையாடப்பட்டது. கலாசார மத்திய நிலையத்தினை உரிய திணைக்களங்களிடம் ஒப்படைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.(ம-7,33)




## முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புத் தொடர்பில் ஆலோசனை

### பதில் பொலிஸ்மா அதிபர்

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புத் தொடர்பான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த யோசனை தொடர்பில் அமைச்சரவை வழங்கும் தீர்மானத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை குறைப்பதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென பதில் பொலிஸ் மாஅதிபர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவைப் பத்திரமொன்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத் தேர்தல் : 2024

# எமது முன்னுரிமைகளை நிறைவேற்ற எனக்கும் வாக்களியுங்கள்



1. உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையில், தியாகம் புரிந்தவர்களுக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவோம்.

2. அடையாளம், நிலம், தொன்மை விழுமியங்களைப் பாதுகாக்கும் அடிப்படையில் பெண்கள் மற்றும் இளையோருக்கு சம சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் அரசியலை முன்னெடுப்போம்.

3. திறமைக்கு முன்னுரிமை வழங்கி, தொழில் முனைவோருக்கான அரசியல் பொருளாதாரச் சூழலை ஏற்படுத்துவோம்.

4. கடல் மற்றும் நில வளங்களைப் பாதுகாப்பதுடன் நவீன தொழில்நுட்பத்துடன் விவசாய உற்பத்தி வருமானத்தையும் மேம்படுத்துவோம்.

5. மாணவர்களுக்கு சமமான வளங்களையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி, விஞ்ஞான ரீதியாக அறிவூட்டப்பட்ட சமூகத்தை உருவாக்குவோம்.

6. ஒடுக்கப்பட்டவர்கள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சம வாய்ப்புகளை உருவாக்குவோம்.

7. குறுகிய கால அரசியல் இலாபங்களுக்காக பல்வேறுபட்ட காரணிகளால் அரசியல் பிளவுகுட்பட்டுள்ள தமிழ் மக்களை ஒருமித்த அரசியல் கூட்டுக்குரலாக மாற்றுவதற்கான அணிதிரட்டலை இலகுபடுத்தல்.


(C-016)

6

**சந்திரகாசன்**
**இளங்கோவன்**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடியலை நோக்கி ...

# பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2024




(C-049)


சுயேச்சைக் குழு - 2 X

1 2 3 4 5 6 7 8 9

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு! இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்





திரு. M.A.சுமந்திரன்


திரு. இம்மானுவல் ஆனல்ட்


திரு. கேசவன் சயந்தன்


திருமதி.கிருஷ்ணவேணி ஸ்ரீதரன்


திரு. தியாகராசா பிரகாஷ்


திரு. செ.சந்திரகாசன் இளங்கோவன்


திரு. சிவஞானம் சிறீதரன்


திருமதி. சுரேக்கா ஜெசிதரன்


திரு. சந்திரலிங்கம் சுகிர்தன்

(C-043)


**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**

சலுகைகளுக்காக உரிமைகளையோ, நோக்கங்களையோ தாரை வார்க்காது, வளமான தேசத்தில் வலிமையான தலைமைகளைத் தெரிவு செய்ய உங்கள் வாக்குகளை வீட்டுச் சின்னத்திற்கு இட்டு நீங்கள் விரும்பும் மூன்று வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு மேலேயும் புள்ளடியிடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேசத்தை மேம்படுத்த எமக்கு வாக்களியுங்கள்

## தர்மலிங்கம் சித்தார்த்தன்



ஒரு சமூகம் முன்னேற்றமடைவதும், பின்னடைவு காண்பதும் தனித்தனியே உங்களாலோ அன்றி அரசியல்வாதிகளான எங்களாலோ அல்ல. இரு தரப்பினரும் இணைந்த செயற்பாடுகள் தான் அனைத்திற்கும் காரணமாகின்றன என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் யாழ் தேர்தல் மாவட்ட வேட்பாளர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களை நோக்கி நாங்கள் விரல் நீட்டுவதிலோ அல்லது எங்களை நீங்கள் விமர்சனம் செய்வதிலோ ஒரு நியாயமும் கிடையாது என்பது எனது உறுதியான நிலைப்பாடாகும். என்னால் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும், செயற்றிட்டங்களும் அபிவிருத்திகளும் உங்களது பூரண ஒத்துழைப்புடனேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.


எனது அரசியல் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் உங்கள் மீது அழுத்தங்களையோ, திணிப்புகளையோ மேற்கொண்டிருக்கவில்லை என முழுமையாக நம்புகிறேன்.

இதனை நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மட்டுமன்றி வன்னி மாவட்டத்திலும் (வவுனியா. மன்னார், முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்கள்) சிறு பகுதி இடங்கள் மாத்திரம் அரச கட்டுப்பாட்டில் இருந்தது. அரச கட்டுப்பாட்டுகளில் இல்லாத பகுதிகளில் அங்கு சேவையாற்றிய அரச உத்தி யோகத்தர்கள் முகம் கொடுத்த பல பிரச்சினைகளை தீர்ப்பதில் நான் கவனம் செலுத்தினேன் என்பதை அப்போது அங்கு கடமையில் இருந்த அனைத்து அரச உத்தியோகத்தர்களும் ஏற்றுக்கொள்வீர்கள். அத்துடன் அந்த பகுதிகளிலும் அதிகாரிகளினால் பிரேரிக்கப்பட்ட வேலைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கினேன் என்பதை அவ் அதிகாரிகளுக்கு நன்கு தெரியும்.

எதிர்வரும் காலங்களிலும். அவ்வாறானதோர் கௌரவமான புரிந்துணர்வு மிக்க இணைந்த செயற்பாடுகள் மூலம், எமது பிரதேசத்தை மேம்படுத்தவும் எமது மக்களின் வாழ்வு நிலையை சிறப்பானதாக்கவும் உங்கள் அனைவரினதும் ஆதரவை, ஆலோசனையை, ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-8)

# தாயகம், தேசியம், சுயநிர்ணயம் இவற்றை உச்சரிப்பதால் பலனில்லை

## கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

இலங்கைவாழ் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் ஒருமித்த கொள்கை ஒன்றைக் கொண்டிரா விட்டால். எமது எதிர்காலம் கானல் நீராகிவிடும் என அகில இலங்கை தமிழர் மகாசபை யின் வேட்பாளர் கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது புலம்பெயர் இரத்த உறவுகள் அடிக்கடி பயன்படுத்தும் "தாயகம், தேசியம், சுயநிர்ணயம்" எனும் வார்த்தைகளை நாமும் நாளாந்தம் உச்சரிப்பதன் மூலம் ஒற்றுமை வரப்போவ தில்லை. நமது பிரச்சினைகள் தீரப்போவதும் இல்லை. நாட்டிலிருக்கும் நம்மவர்கள் மேலும் புலம் பெயர்வதற்குத்தான் அது வழிவகுக்கும்.

1983 தொடக்கம் இற்றைவரை இந் நாட்டுத் தமிழர்கள் தொகை அரைவாசியாகக் குறைந்துவிட்டது. அன்று யாழ்ப்பாணத்திற்காக இருந்த 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 ஆகக் குறைந்துவிட்டது. எனவேதான் நாம் கூறுகின்றோம், தந்தை செல்வாவின் தாரக மந்திரமான "நடைமுறைச் சாத்திய அரசியலையே" தமிழர்கள் பின்பற்ற வேண்டும். எமது கட்சியின் 18 ஆண்டுச் சரித்திரத்தில் நாம் தந்தை செல்வாவின் பாதையிலேயே பயணித்துள்ளோம். தொடர்ந்தும் பயணிப்போம்.

2000ஆம் ஆண்டில் சந்திரிக்கா அம்மையார் பாராளுமன்றத்தில் முன்வைத்த சமஷ்டித் தீர்வை எதிர்த்து பேசிய தமிழர் கட்சியினரே 2013 தொடக்கம் வட மாகாணசபையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் தமிழர்களுக்கு அதிகாரங்கள் எதுவுமே கிடையாது என்று உலகுக்குக் காட்ட வேண்டும் எனச் செயற்பட்டவர்கள்.


கிளிநொச்சி நீரை யாழ்ப்பாண மக்களுக்குக் குடிப்பதற்கு கொடுக்கக் கூடாது என்று கூக்கூரல் இடும் அதே கட்சியினருக்கு, வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டும் எனக் குரல் கொடுக்கும் தார்மீக உரிமை கிடையாது.

தந்தை செல்வாவின் நடைமுறைச்சாத்திய அரசியல் பாதையில் பயணிக்கும் எம்மால் மட்டுமே தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணமுடியும். ஒரு விசேட முறையில் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு 100 நியதிச்சட்டங்களை உருவாக்கி அதிகாரப் பகிர்வைப் பயன்படுத்தித் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்துவோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# தேர்தல்களம்




# அனுபவங்களின் வெளிப்பாடுதான் எங்களின் கொள்கை- டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

அனுபவங்களின் வெளிப்பாடு தான் ஈ.பி.டி.பியின் கொள்கை என தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாம் எடுத்துக் கொண்ட கொள்கையுடன் அதன் இலக்கு நோக்கி பயணிக்கும் போது மற்றவர்களின் குரைப்புக்களையும் கனைப்புக்களையும் கண்டு கொள்வது கிடையாது எனவும் தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய நல்லிணக்கத்தை நடை முறைப்படுத்து வதற்காக இம்முறை பல மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருந்தோம்.

அன்று நாம் சிறுவர்களாக இருந்த போது "சோறா சதந்திரமா" வேண்டும் என உணர்ச்சிவசப்படுத்தி பிரசாரங்களை முன்வைத்தனர்.

அன்று எமக்கு சோறு இருந்தமையால் சுதந்திரத்தை கையிலெடுத்து வீதிக்கு இறங்கினோம்.

இதன் விளைவாக சோறும் இல்லை சுதந்திரமும் இல்லை என்ற நிலை உருவானது.

எமக்கு சோறும் வேண்டும் சுதந்திரமும் வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றிருந்தால் இன்று நாம் சுய நிர்ணய உரிமையை நடைமுறைறையில் பெற்றிருக்கலாம் என்றே நான் எண்ணுகின்றேன்.

அன்று நாம் ஆயுதத்தை தூக்கியது சுதந்திரத்தை எட்டமுடியும் என எண்ணி யதால் ஆனால் அது தவறாகிவிட்டது. இம்முறை மக்கள் எனக்கு அரசியல் அதிகாரத்தை தந்தால் நிச்சயம் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டமுடியும் என நம்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8-33)

# தமிழர்களுக்கு ஜே.வி.பி யால் எதுவும் கிடைக்கப்போவதில்லை

## பாலச்சந்திரன் கஜதீபன்



(யாழ்ப்பாணம்)

ஜே.வி.பி கட்சிக்கு அளிக்கும் வாக்கு மிகவும் ஆபத்தானதாகும். ஏனெனில் அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எடுக்கும் முடிவுகள் ஒரு போதும் தமிழர்களுக்கு எந்தப் பலனையும் தராது என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளரான பா.கஜ தீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுயேட்சைக் குழுக்களுக்கு அளிக்கப்படும் வாக்குகள் பயனற்றவை. வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க களத்தில் இறங்கியவர்கள் தான் சுயேட்சைக் குழுக்கள். இவர்களுக்கு வாக்களிக்காது 5 கட்சிகள் ஒற்றுமையாக நிற்கும் தமது சங்குச் சின்னமாகிய ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணிக்கு வாக்களிக்குமாறு அவர் தனது உரையில் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனிக்கான விசேட பண்ட வரி நீடிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் சீனி கிலோவொன்றுக்கான 50 ரூபாய் என்ற விசேட பண்ட வரி விதிப்பு அரசாங்கத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வரி விதிப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடம் ஒன்றிக்காக விதிக்கப்பட்டிருந்த விசேட பண்ட வரி கடந்த முதலாம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில், வரி விதிப்பு நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-8)


**வேலையாள் தேவை**

பலசரக்குக்கடை, பழக் கடைக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. (2577)

தொடர்புகளுக்கு:

077 036 6388



**வைத்தியம்**

வலிப்பு நோய் | கை விறைப்பு | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால் வலி Sciatica | நாட்பட்ட சளி | தலைக்கு இரத்தம் போகாமை

அதி விசேட மூலிகை, Acu சிகிச்சைகள்

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : 0777 301 669

(2568)


## அறிவித்தல்

## நீதிவான் நீதிமன்றம், பருத்தித்துறை

### முடிவுற்று ஐந்து வருடங்கள் கடந்த மூல வழக்கேடுகளை அழித்தல் தொடர்பானது.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவழக்கைகள் முடிவுற்று ஐந்து (05) வருடங்களுக்கு மேற்பட்ட ஒரு தொகுதி மூல வழக்கேடுகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை இந் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு 2024.10.25 ஆம் திகதிய வர்த்தமானியில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தல் திகதியான 2024.10.25 ஆம் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுற்றதன் பின்னர் அதாவது 2025.01.25 ஆம் திகதிக்குப் பின்னர் குறித்த மூல வழக்கேடுகள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து அழிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே இந்த வழக்கேடுகளின் அல்லது அதன் பகுதிகளின் பிரதிகள் தேவைப்படும் யாதேனும் தொடர்புடைய கட்சிக்காரர் இருப்பின் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றப் பதிவாளரிடம் எழுத்து மூலம் 2025.01.25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(இ) பதிவாளர்

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர் மாற்றம்

### 36B, பொன்னாலை வீதி, வட்டாரம்-04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04. பொன்னாலை வீதியிலுள்ள இல: 36B ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **செல்வி விக்கினேஸ்வரி சோமசேகரம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **பதஞ்சலி தேவசேனாதிபதியும் பெண் இராஜேஸ்வரியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனம் தங்களில் முதலாம் பேரின் பேரன் பேர்த்தி உலகாவலர் சோம சேகரத்துக்கும் பெண் வள்ளியம்மைப்பிள்ளைக்கும் உரியதாகவிருந்ததென்றும், அவர்கள் தமது மகளான இராசரத்தினம் கணேசரத்தினம் பெண் விக்கினேஸ்வரிக்கு சீதனமாகக் கொடுத்திருந்தார்கள் என்றும், அவர்கள் 1961 ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கு குடிபெயர்ந்தபோது குறித்த வள்ளியம்மைப்பிள்ளையின் சகோதரியின் மகனான தங்களில் முதலாம் பேரிடம் குறித்த ஆதனத்தினை நன்கொடையளிப்பதாக குறிப்பிட்டிருந்த போதிலும், அது சம்பந்தமான ஆவணங்களை பெறமுடியவில்லை என்றும் 1961 ஆம் ஆண்டிலிருந்து தமது ஆட்சியிலே குறித்த ஆதனம் உள்ளது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 6192/21.08.2004 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**சுப்பிரமணியம் நந்தகுமாரனும் பெண் உதயநாயகியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6238/29.08.2004 ஆம் இலக்க உறுதியால் குறித்த **பதஞ்சலி தேவசேனாதிபதியும் பெண் இராஜேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **சுப்பிரமணியம் நந்தகுமாரனும் பெண் உதயநாயகியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சுப்பிரமணியம் நந்தகுமாரனும் பெண் உதயநாயகியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,

வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

(2574)


**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Engineer, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/14901 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>1 இல் செவ்<br>கி.பா: 81<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bsc, Msc (following)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் ,வெளிநாடு<br>தொ.இ: G/14902 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 42<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Bsc, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/14904 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>11 இல் சூரி செவ்<br>கி.பா: 8 1/2<br>உயரம்: 5'24'<br>தகைமை/தொழில்:Bsc, Software Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/14903 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>1 இல் சூரி செவ்<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்: A/L, Bussiness (france)<br>எதிர்பார்ப்பு: PR உள்ளவர்<br>தொ.இ: B/14905 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 30 1/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, தையல்<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/14909 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## கரைதுறைப்பற்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

## மகேந்திரா வாகனம் பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான NP PU 9562 இலக்கம் உடைய மகேந்திரா வாகனம் பகிரங்க ஏல விற்பனையானது 20.11.2024 ஆம் புதன்கிழமை மு.ப 10.30 மணிக்கு குமுழமுனையில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற உள்ளது. இவ் வாகனத்தினை பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை பார்வையிட முடியும். இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்வோர் ஏல விற்பனை திகதி அன்று மு.ப 9.30 மணிக்கு முன்னர் மீளளிக்க முடியாத முற்பணமாக ரூபா 1000.00 யினை தலைமை காரியாலயத்தில் செலுத்தி பற்று சீட்டினை பெறுதல் வேண்டும். இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள முடியும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

**நிபந்தனை 01** :- ஏல விற்பனை அன்று வாகனத்திற்கான பணத்தினை உடன் செலுத்தி அன்றைய தினமே வாகனத்தினை அலுவலக வளாகத்தில் இருந்து கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

**நிபந்தனை 02** - ஆகக்குறைந்த கேள்வி தொகை 1600000.00 (பதினாறு இலட்சம்)

தலைவர்

கரைதுறைப்பற்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

குமுழமுனை

தொலைபேசி: 0776148300, 0776135809

(சி-1527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டிகை காலத்திற்கு முன்

# மா, வெண்ணெய் விலைகளை குறைத்தால் பாண், கேக் விலையை குறைக்கலாம்

## இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

வரும் பண்டிகைக் காலத்துக்கு முன் கோதுமை மா மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெண்ணெய்யின் விலையை குறைத்தால் பாணின் விலை 100 ரூபாயாகவும், ஒரு கிலோ கேக்கின் விலை 800 முதல் 900 ரூபாய் வரை குறைக்கப்படும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்தார்.

மற்றைய பேக்கரிப் பொருட்களின் விலையை நுகர்வோருக்கு பெரும் நிம்மதியை அளிக்கும் வகையில் குறைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் நிச்சயமாக தலையிட்டு இரண்டு உள்ளூர் மாவு நிறுவனங்களினால் 195 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் கோதுமை மாவின் விலையை 150 ரூபாயாகவும் இறக்குமதி செய்யப்படும் வெண்ணெய்யின் விலையை 150 ரூபாயாகவும் குறைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்கு முன்னர் பாண், கேக் மற்றும் ஏனைய பேக்கரிப் பொருட்களின் விலையை குறைத்து நுகர்வோர் நிம்மதியடைய முடியும் என ஜயவர்தன மேலும் தெரிவித்தார். (நி-8)

# பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை வழங்க தயார்

## சீனா அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அனைத்து சீருடைகளையும் நன்கொடையாக வழங்க சீன அரசாங்கம் தயாராக இருப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

கம்பஹா - கெப்பெட்டிபொல தேசிய பாடசாலையில் இடம்பெற்ற குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பாடசாலை மாணவர்களுக்கான உத்தியோகபூர்வ சீருடையில் கடந்த வருடம் நூற்றுக்கு 70 வீதத்தையும் இந்த வருடம் 80 வீதத்தையும் சீனா நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதன்படி, அடுத்த வருடம் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான 100 வீத சீருடைகளை வழங்குவதற்கு தமது அரசாங்கம் தயாராக இருப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார். (நி-8)

## மின்சார சபையை

# தனியார் மயமாக்கும் முயற்சி நிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை தனியார் மயமாக்குவதை நிறுத்திவிட்டு அதன் அத்தியாவசிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அதன் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி மின்சார சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நடத்திய கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதன்படி சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும், வாடிக்கையாளர் திருப்திக்கான உயர் மதிப்பைப் பேணுவதற்கும் நிறுவனத்திற்கு நியாயமான இலாபத்தைப் பெறுவதற்கும் சமூகப் பொருளாதாரத்திற்கு உயர் நன்மைகளைப் பெறுவதற்கும் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமான நிறுவன சீர்திருத்தங்களைச் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் மின்சாரச் சட்டத்தில் திருத்தம் செய்யவும், அரசுக்குச் சொந்தமான மின் உற்பத்தி நிலையங்கள், பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பை தனியார் மயமாக்காமல் முழுவதுமாக அரசுக்குச் சொந்தமான சுயாதீன அமைப்பில் இயக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அடுத்த ஐந்து வருடங்களில் இலங்கையை பிராந்தியத்தில் மிகக் குறைந்த மின்சாரச் செலவைக் கொண்ட நாடாக மாற்றுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

எரிசக்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகளுக்காக அனைத்து ஊழியர்களின் செயலூக்கமான பங்களிப்பைப் பெறுவதற்கு அனைத்து மட்ட ஊழியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்றை நிறுவுவதற்கும் முன்மொழியப்பட்டது. (நி-8)

# சா/த பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

2024 கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை கோரும் பணி நேற்று ஆரம்பமானது.

இணையவழியில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபர் மூலமாகவும், தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான தனியார் பரீட்சார்த்திகள் விண்ணப்பச் செயல்முறையின் போது தமது தேசிய அடையாள அட்டைகளைப் பயன்படுத்த வேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதி நள்ளிரவாகும்.

எக்காரணம் கொண்டும் இந்த காலக்கெடு நீடிக்கப்பட மாட்டாது என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

## தேர்தல்களம்

# தமிழர் தேசத்தை தலைநிமிர வைப்போம்

## நடராஜா காண்டீபன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் சரியான தரப்பை நோக்கி அணி திரள ஆரம்பித்து விட்டனர்.

எனவே உறுதியான தலைமையின் கீழ் ஓரணியாகி தமிழர் தேசத்தை தலைநிமிர வைப்போம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளரும் சட்டத்தரணியுமான நடராஜா காண்டீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலங்களில் பெரும்பாலான இடங்களில் ஏனைய தரப்பை அனுமதிக்காத போதும் எங்களை அழைத்து கலந்துரையாடுவது இந்த அரசியல் பயணத்தை சற்று ஊக்கப்படுத்துகின்றது.


14 வருடங்களில் இந்த மாற்றங்கள் உருவாகியிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

அந்த உன்னத ஆத்மாக்கள் தமிழினத்தை வழி நடத்தும் என்ற ஒற்றை நம்பிக்கையில் தொடர்ந்து பயணிப்போம் என தெரிவித்தார். (நி-8)

# புதுவிடியலை நோக்கி புதுப்பொலிவுடன் பயணிப்போம்

## நாகரத்தினம் கமலரூபன்

(யாழ்ப்பாணம்)



வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன். எழுந்தால் பலமான தமிழர் தரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என யாழ்.தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக்குழு 2 இல் போட்டியிடும் வேட்பாளரும் சட்டத்தரணியுமான நாகரத்தினம் கமலரூபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சு வார்த்தைக்கு புதிய தோர் மாற்று அரசியல் அவசியம்.

காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டும் மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ளனர்.

இந்நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அரசியல் அபிலாசைகளுடன் பொருளாதார மேம்பாட்டை நோக்கி மாற்றத்துடன் பயணிக்க சிந்தித்து வாக்களிக்குமாறு அவர் தெரிவித்தார். (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் - 2024

03

## வட மாகாண வாக்காளர்கள் தெரிந்திருக்க வேண்டியவை




வன்னி தேர்தல் மாவட்ட மாதிரி வாக்குச் சீட்டை (படம் B) ஜப் பார்க்கும் போது உங்களுக்கு இடப்பக்கமாக உள்ள பகுதியில் அரசியல் கட்சியின் பெயர்களும் ஒரு சுயேட்சைக் குழுவின் இலக்கமும் இருக்கின்றன. அதை தொடர்ந்து அக்கட்சிகளின் சுயேட்சைக் குழுவின் சின்னங்கள் இருக்கின்றன. அதன்பின் ஒரு கூடு இருக்கின்றது. அக் கூட்டுக்கு உள்ளேதான் நீங்கள் விரும்பும் கட்சிக்கு புள்ளடி இடவேண்டும். உங்கள் புள்ளடி கூட்டுக்கு வெளியே நீளாதவாறு போடுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இதேபோல் வாக்குச் சீட்டினை நீங்கள் பார்க்கும் உங்கள் வலது பக்கத்தில் இருப்பவை எல்லாம் சுயேட்சைக் குழுக்களின் இலக்கங்களாகும்.

முன்னர் கூறியது போல, வலது பக்கத்தில் எல்லாம் சுயேட்சைக் குழுவின் இலக்கங்கள் இருக்கின்றன. அதைத் தொடர்ந்து அவற்றின் சின்னங்கள் இருக்கின்றன. அதன் பின் ஒரு கூடு இருக்கின்றது. அக் கூட்டுக்கு உள்ளேதான் நீங்கள் விரும்புபவருக்கு புள்ளடி இடவேண்டும். உங்கள் புள்ளடி கூட்டுக்கு வெளியே நீளாதவாறு போடப்படவேண்டும். நீங்கள் மேற்கூறியவாறு புள்ளடியிட்டவுடன், நீங்கள் உங்கள் கட்சிக்கு / சுயேட்சைக் குழுவுக்கு வாக்களித்து விட்டீர்கள்.

நீங்கள் கட்சியில்/ சுயேட்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால் உங்களுக்கு தரப்பட்ட வாக்குச்சீட்டில் கீழே பார்த்தீர்களானால் 1 தொடக்கம் 9 வரை இலக்கமிட்ட பெட்டியிருக்கும் அங்குதான் நீங்கள் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும். இதனை விளங்கிக் கொள்வதற்காக வன்னி தேர்தல் மாவட்ட மாதிரி வாக்குச் சீட்டை (படம் B) மீண்டும் பாருங்கள். அவ் வாக்குச் சீட்டின் அடிப்பகுதியில் படம் 1இல் காட்டப்பட்டது போன்ற பெட்டியைக் கவனியுங்கள். அங்குதான் நீங்கள் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.


படம்-1

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

நீங்கள் விரும்பும் வேட்பாளருக்கு எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றி முன்னர் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இங்கு கூறப்படவில்லை.

வன்னி தேர்தல் மாவட்டத்தில போட்டியிடும் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் சின்னங்கள் பற்றி......

முன்னர் கூறியது போல வன்னி தேர்தல் மாவட்டத்திலிருந்து 23 அரசியற்கட்சிகளும் 25 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. அதாவது மொத்தமாக 48 குழுக்கள் போட்டியிடுகின்றன. எனவே 48 குழுக்களுக்கும் 48 சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் 23 அரசியற்கட்சிகளுக்கான சின்னங்கள் எவை என்பதை படம் -5 காட்டுகிறது.




25 சுயேட்சைக் குழுக்களுக்கான சின்னங்கள் எவை என்பதை படம் -6 காட்டுகிறது.




போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள், சுயேட்சைக் குழுக்களின் இலக்கங்கள் மற்றும் அவற்றின் சின்னங்களை அட்டவணை - 2 காட்டுகிறது.

பாராளுமன்றத் தேர்தல் -2024 அட்டவணை -2

போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள், சுயேச்சை குழுக்களின் இலக்கங்கள் மற்றும் அவற்றின் சின்னங்கள் - வன்னி மாவட்டம்

| போட்டியிடும் குழு | சின்னம் | போட்டியிடும் குழு | சின்னம் |
|---|---|---|---|
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | துவிச்சக்கர வண்டி | சுயேச்சை குழு 2 | அன்னாசி |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | வீடு | சுயேச்சை குழு 3 | கை உழவு இயந்திரம் |
| ஈரோஸ் ஜனநாயக முன்னணி | மெகாஃபோன் | சுயேச்சை குழு 4 | லாந்தர் |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | வீணை | சுயேச்சை குழு 5 | பசு |
| ஐக்கிய தேசிய கட்சி | யானை | சுயேச்சை குழு 6 | ஐஸ்கிறீம் |
| ஐக்கிய தேசிய கூட்டமைப்பு | தராசு | சுயேச்சை குழு 7 | கைக்கோடாரி |
| ஜனநாயக ஐக்கிய முன்னணி | இரட்டை இலைகள் | சுயேச்சை குழு 8 | தாயக்கட்டை |
| மக்கள் போராட்ட முன்னணி | குடை | சுயேச்சை குழு 9 | கிரிக்கற் மட்டை |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | சங்கு | சுயேச்சை குழு 10 | ரயர் |
| ஜனசெத பெரமுன | உழவு இயந்திரம் | சுயேச்சை குழு 11 | தையல் இயந்திரம் |
| தேசிய மக்கள் சக்தி | திசைகாட்டி | சுயேச்சை குழு 12 | வண்டில் |
| தேசிய ஜனநாயக முன்னணி | மோட்டார் கார் | சுயேச்சை குழு 13 | குதிரை லாடம் |
| நாட்டுப்பற்றாளர் மக்கள் சக்தி | பூச்செண்டு | சுயேச்சை குழு 14 | ஒட்டகச் சிவிங்கி |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | சூரியன் | சுயேச்சை குழு 15 | புகை வண்டி என்ஜின் |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | கழுகு | சுயேச்சை குழு 16 | சிசிரிவி கமரா |
| ஜனநாயக தேசிய கூட்டணி | தபால் பெட்டி | சுயேச்சை குழு 17 | வயலின் |
| ஜனநாயக இடதுசாரி முன்னணி | மணிக்கூடு | சுயேச்சை குழு 18 | தட்டச்சுப்பொறி |
| நல்லாட்சிக்கான தேசிய முன்னணி | இரட்டைக் கொடிகள் | சுயேச்சை குழு 19 | மேசை மின்விசிறி |
| சிறீலங்கா தொழிலாளர் கட்சி | கங்காரு | சுயேச்சை குழு 20 | நெற்கொட்டகை |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | மலர் மொட்டு | சுயேச்சை குழு 21 | கைப்பிடிக் கிண்ணம் |
| ஐக்கிய மக்கள் சக்தி | தொலைபேசி | சுயேச்சை குழு 22 | காற்றாற்றல் சுழலி |
| சமநிலம் கட்சி | கடித உறை | சுயேச்சை குழு 23 | கரும்பலகை |
| சர்வஜன அதிகாரம் | பதக்கம் | சுயேச்சை குழு 24 | கால்பந்து |
| சுயேச்சை குழு 1 | தொலைக் காட்சிப்பெட்டி | சுயேச்சை குழு 25 | பூட்டு |

### வாக்களிப்பது பற்றிய சில கேள்வி பதில்கள்

**கேள்வி- வாக்களிக்க போகும் போது நான் விரும்பும் அரசியற்கட்சியின் பெயர், சுயேச்சை இலக்கம் தெரிந்திருக்க வேண்டியது அவசியமா?**

**பதில்** - தெரிந்திருப்பது நல்லது. ஆனால் அரசியற்கட்சியின் பெயர், சுயேட்சை இலக்கம் என்பவற்றை ஞாபகம் வைத்திருப்பது சிறிது கடினம். இதற்கு இலகுவான வழி நீங்கள் விரும்பும் அரசியற்கட்சியின் / சுயேட்சையின் சின்னத்தை மிகத் தெளிவாக ஞாபகம் வைத்திருப்பதுதான்.

**கேள்வி- ஒரு சின்னத்தை எடுத்துக் கொண்டால் அவை வெவ்வேறு வடிவத்தில் இருக்கலாமல்லவா?**

**பதில்-** தேர்தல்கள் ஆணைக்குழு சின்னங்களின் வடிவங்களை 2024.10.04 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்துள்ளது. அதில் இருந்து எடுக்கப்பட்ட வடிவங்களையே எனது இக் கட்டுரையில் நான் பிரசுரித்துள்ளேன். இக் கட்டுரையில் தரப்பட்டுள்ள வடிவங்கள்தான் வாக்குச்சீட்டில் இருக்கும் என்பது நம்பிக்கை. எனவே நீங்கள் அச் சின்னத்தை இக் கட்டுரையில் பார்த்து மனதில் பதிய வைத்துக்கொள்ளுங்கள். அவ்வாறு மனதில் பதிய வைத்துக் கொண்டால் நீங்கள் வாக்களிக்கும் போது சின்னம் சம்பந்தமாக எவ்வித சந்தேகமும் ஏற்படாது.

**கேள்வி- சில சின்னங்களைப் பார்க்கும் போது அவை ஒன்றோடு ஒன்று ஒத்ததாக அல்லது தெளிவில்லாமல் இருக்கின்றனவே?**

**பதில்** - முதலாவதாக நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியது வாக்குச்சீட்டில் சின்னங்களின் பெயர்கள் தரப்படுவதில்லை. சின்னங்கள் மட்டும்தான் தரப்பட்டிருக்கும். எனவே சரியான சின்னத்தை மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். யாழ் மற்றும் வன்னி மாவட்டங்களை பொறுத்த மட்டில் வீட்டுச் சின்னமும் நெற்கொட்டகைச் சின்னமும் சிறிய மனத் தளம்பலை ஏற்படுத்தலாம். வீட்டுச் சின்னம் ஓர் அரசியற்கட்சிக்கானது. நெற்கொட்டகைச் சின்னம் ஒரு சுயேட்சைக் குழுவுக்கு ஒதுக்கப்பட்டது. அவற்றை இக்கட்டுரையில் பார்த்தால் இலகுவில் வேறுபடுத்தி அடையாளம் கண்டு கொள்ளலாம். இவ்வாறு வேறு சில சின்னங்களும் சிறு சிறு மனத் தளம்பலை ஏற்படுத்தும். எனவேதான் இக்கட்டுரையில் யாழ் மற்றும் வன்னி மாவட்டங்களுக்கான சகல சின்னங்களும் வர்த்தமானி அறிவித்தலில் இருந்து எடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி- வாக்களிக்கச் செல்லும் போது நான் தெரிவு செய்த சின்னத்தின் வடிவத்தை மறந்துவிட்டால் என்ன செய்வது?**

**பதில்** - நீங்கள் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வரிசையில் நிற்கும் முன், வாக்களிப்பு நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அறிவித்தல்களைப் பார்க்கவும். அங்கு உங்களுக்கு வேண்டிய சகல தகவல்களும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

**கேள்வி- வாக்களிக்கும் நிலையத்தின் உள், வாக்களிக்கும் போது எனக்கு சின்னம் பற்றிய சந்தேகம் அல்லது சின்னத்தை கண்டுபிடிக்க முடியாவிட்டால் நான் என்ன செய்வது?**

**பதில்** - நீங்கள் அங்கு கடமையில் இருக்கும் தலைமை தாங்கும் அலுவலரின் உதவியை நாடுங்கள். அவர் உங்களுக்கு உதவி செய்வார். அவர் நீங்கள் யாருக்கு வாக்களித்தது என்பதை வெளியிடமாட்டார். அதற்கு காரணம் அவர் இரகசியம் பேணல் அறிவிப்பில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னரே அங்கு கடமை செய்கிறார்.

(முற்றும்.)

கலாநிதி க. தவலிங்கம், ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## யாரையும் விமர்சனம் செய்யக் கூடாது ரசிகர்களை கண்டித்த விஜய்



(சென்னை)
தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாட்டை வெற்றிகர மாக நடத்தி முடித்துள்ள விஜய், அதே விறுவிறுப்புடன் கட்சி யின் முதல் செயற்குழு கூட்டத் தையும் நடத்தி முடித்துள்ளார்.

திரையுலகைத் தாண்டி அர சியலுக்கு வந்துள்ள விஜய் அனைத்து தரப்பினரின் ஆதர வையும் தனதாக்கிக் கொள் ளும் முயற்சியில் ஈடுபட்டு வரு கிறார். அந்த வகையில் யாரை யும் தரக்குறைவாக விமர்சனம் செய்யக்கூடாது என்று தொண் டர்களுக்கு கண்டிப்புடன் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த செயற்குழு கூட்டத்திலும் விஜய் இதைக் கண்டிப்புடன் வலியுறுத்தி இருக்கிறார். அரசியல் கட்சி தலைவர்களை மட்டுமல்ல, திரையுலகில் முன் னணியில் இருக்கும் ரஜினி, அஜித் உள்ளிட்டோர்களையும் எந்த வகையிலும் சமூக வலைத்தளத்தில் விமர்சனம் செய்யாதீர்கள் எனத் தெரி வித்துள்ளார்.

ரஜினி, அஜித் படங்கள் வெளியாகும்போது விஜய் ரசி கர்களும், விஜய் படங்கள் வெளியாகும்போது ரஜினி, அஜித் ரசிகர்களும் சமூக வலைத்தளங்களில் கருத்தி யல் ரீதியாக மோதிக்கொள்வது வழக்கமான ஒன்று.

திரைப்படங்கள் தொடர் பாக தனது ரசிகர்களுக்கும், அஜித் ரசிகர்களுக்கும் உள்ள மோதலை அன்பு என்னும் புள்ளியில் இணைக்கும் வகை யிலும் காலம் காலமாக நடந்து வரும் தல-தளபதி போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில்தான் சமீபத்தில் கோட் படத்தில் அஜித் ரசிகர் களை மகிழ்ச்சி அடையும் வகையில் காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டது. அதேபோல் ரஜினிகாந்த் வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த போது சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் நலம் பெற விழைகி றேன் என்று எக்ஸ் வலைத் தளத்தில் பதிவு செய்திருந்தார்.

இருப்பினும் வலைத் தளத் தில் ரஜினி-விஜய், விஜய்-அஜித் ரசிகர்கள் மோதல் என்பது குறைந்த பாடில்லை. இதற்கிடையில் அரசியல் சம்பந்தமான கேள்விகளுக்கு பதில் அளிக்காமல் இருந்து வந்த நடிகர் ரஜினிகாந்திடம், விஜய் மாநாடு குறித்து கேட் கப்பட்டபோது விஜய் வெற்றிகர மாக மாநாட்டை நடத்தியி ருக்கிறார், அவருக்கு என் வாழ்த்துகள் என்று தெரி வித்தார். இதை தனது கட்சி செயற்குழு கூட்டத்தில் விஜய் கூறி நெகிழ்ந்திருக்கிறார்.

இதற்கிடையே திரையு லகில் தான் நிறைவாக ஒப்புக் கொண்டுள்ள எச்.வினோத் இயக்கும் படத்திற்கான படப் பிடிப்பில் விஜய் விரைவில் இணைய உள்ளார். இந்த படத்தின் மூலம் அனைத்து நடிகர்களையும் மனங்க ளையும் வெல்லும் அளவுக்கு காட்சி அமைப்புகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அரசியலில் தனது பாதைக்கான முன் னோட்டமாக அந்தப் படம் இரு க்கும் என்றும் சொல்லப்படு கிறது. சினிமாத்துறையில் தனக்கு போட்டியாளர்களாக இருப்பவர்களின் ரசிகர்களை தன் அன்புப் பிடியில் கொண்டு வருவதற்கான விஜய்யின் அர சியல் வியூகம் என நிபுணர் கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து வருகின்றனர். (நி-8)

## அ பெ

## சீண்



(பியாங்யாங்)

கொரிய தீபகற்

கொரியா நா


சோதனையை ந

தன் எதிரி நாடுகளாக கரு தும் தென் கொரியா, ஜப்பான்

ம

டு

## ஆக்ரா அருகே போர் விமானம் விபத்து



(டில்லி)
உத்தரபிரதேச மாநிலம் ஆக்ரா அருகே மிக்-29 போர் விமானம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

பஞ்சாப் மாநிலம் அடம் பூரில் இருந்து விமானம் புறப்பட்டு, பயிற்சிக்காக ஆக்ராவுக்குச் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நடந்ததாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானம் தரையில் வீழ்ந்து தீப்பிடித்த போது, விமானி பாதுகாப்பாக வெளி யேற்றப்பட்டார். (நி-8)

## ராட்சத பூசணிக்காயை படகாக மாற்றி பயணம்


### வைரலாகும் வீடியோ



(வோஷிங்டன்)
அமெரிக்காவின் ஒரே கான் மாகாணத் தைச் சேர்ந்தவர் கேரிகிறிஸ் டென்சன் (வயது 46). கின்னஸ் சாதனை முயற் சிக்காக கடந்த 2011 முதல் இவர் தனது தோட்டத்தில் ராட்சத பூசணிக்காயை வளர்த்து வருகிறார். அதன்படி இந்த ஆண்டு சுமார் 500 கிலோ எடை கொண்ட பூசணிக்காயை வளர்த்தார். பின்னர் அந்த பூசணி மூலம் ஒரு படகை உருவாக்கினார்.

இதனையடுத்து கின்னஸ் சாதனை முயற்சியாக கொலம் பியா ஆற்றில் அந்த படகை துடுப்பு மூலம் செலுத்தினார். அதன்படி போன்வில்லே நகரில் இருந்து வான்கூவர் வரை 73 கிலோ மீற்றர் தூரத்துக்கு அந்த படகில் சென்றார். 26 மணி நேரம் நீடித்த இந்த கின்னஸ் சாதனை முயற்சி சமூக வலைத் தளங்களில் வைரலா கியது. இந்த வீடியோவை இது வரை லட்சக்கணக்கானோர் பார்வையிட்டுள்ளனர். (நி-8)

## அமெரிக்க ஜனாதிப தாய்லாந்து நீர் யா



(பாங்கொக்)
உலகம் முழுவதும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் அமெரிக்க ஜனா திபதி தேர்தல் நேற்று நடை பெற்றது.

இந்நிலையில் தாய்லாந்தில் 'கா கியோவ்' திறந்தவெளி உயிரியல் பூங்காவில் உள்ள நீர்யானை ஜனா திபதி தேர்தலில் வெற்றி பெறப் போவது யார் என கணித்த காட்சி கள் அடங்கிய வீடியோ வைரலாகி வருகிறது. அந்த நீர்யானை அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்டு ட்ரம்ப் வெற்றி பெறுவார் எனக் கணித்துள்ளது.

கவனம் ஈர்த்த 'ஹிப்போ' – மூ டெங் என்ற பெயரிடப்பட்ட அந்த நீர்யானையின் முன் பூங்கா பராமரிப்பாளர்கள் இரண்டு தர்பூசணிப் பழங்களை வைத்த னர்.

ஒன்றில் ட்ரம்ப் பெயரும், மற்றொன்றில் கமலா ஹாரிஸ் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த குட்டி நீர்யானை நேராக ட்ரம்ப்

## எதிர்பாராத விதமாக மூடப்பட்ட கார் கதவு 4 குழந்தைகள் மூச்சுத்திணறி உயிரிழப்பு

### குஜராத்தில் சோகம்

(டில்லி)
எதிர்பாராத விதமாக கார் கதவு மூடியதால் 4 குழந்தைகள் மூச்சுத் திணறி உயிரிழந்த சம்ப வம் குஜராத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள் ளது.

குஜராத் மாநிலம் அம்ரேலி மாவட்டத்தில் உள்ள ரந்தியா கிராமத் திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம் பவத்தில் உயிரிழந்த சிறு வர்கள் மத்திய பிரதேசத்தில் உள்ள தார் பகுதியை சேர்ந்த விவசாயத் தொழி லாளி தம்பதியின் குழந் தைகள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


சம்பவ தினமான கடந்த சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் ஒரு பண்ணைக்கு வேலைக்கு சென்ற பெற்றோர் தங்களது 7 குழந்தைகளை அங்கே விளையாடுமாறு கூறி விட்டுவிட்டு சென்றுள்ளனர். 7 குழந்தைகளில் 4 பேர் பண்ணை வீட்டின் அருகே நிறுத்தப்பட்டிருந்த உரி மையாளரின் காரில் நுழைந்துள்ளனர்.

எதிர்பாராத விதமாக காரின் கதவு மூட... பட்டுள்ளது. இதில் காரில் சிக்கிக்கொண்ட 4 குழந் தைகளுக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட்டு காரி லேயே உயிரிழந்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. உயிரிழந்த குழந்தை கள் 2 முதல் 7 வயதுக்குட் பட்டவர்கள் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. இந்நிலை யில் குறித்த சம்பவம் அப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரிக்காவை மீண்டும்
# டும் வட கொரியா!







(ங்)

**பகற்பத்தில் வடகொரியா- தென் நாடுகள் மீண்டும் ஏவுகணை நடத்தியுள்ளன.**

மற்றும் அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

மேலும், தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்துவோம் எனவும் வடகொரியா எச்சரித்து வருகிறது.

இதேவேளை அமெரிக்காவில் தேர்தல் தொடங்குவதற்கு சில மணி நேரங்கள் இருந்த நிலையில், வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளதுடன் கிழக்கு கடல் பகுதியை நோக்கி பல்வேறு குறுகிய தூர ஏவுகணைகளை வட கொரிய இராணுவம் சோதனை செய்ததாக ஜப்பான் மற்றும் தென் கொரியா நாடுகள் தெரிவித்துள்ளன.

அந்த ஏவுகணைகள் சுமார் 400 கி.மீ. தூரம் வரை பாய்ந்து சென்று கடலில் விழுந்ததாக கூறப்படுகிறது.

மேலும் அமெரிக்காவில் தேர்தல் நடைபெறும் சூழலில், வட கொரியா ஏவுகணை சோதனை நடத்தியிருப்பது சர்வதேச அரசியலில் பேசுபொருளாகியுள்ளது. (நி-8)

## திபதி தேர்தலில் வெற்றி யாருக்கு?
## யானை கணிப்பு வீடியோ வைரல்



பெயர் பொறித்திருந்த தர்பூசணியை நோக்கிச் சென்று அதை புசித்தது. அருகிலிருந்த மற்றொரு பெரிய நீர் யானை கமலா ஹாரிஸ் பெயர் இருந்த தர்பூசணிப் பழத்தை உண்டது.

இதன் மூலம் மூ டெங், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் தான் வெற்றி பெறுவார் எனக் கணித்ததாகக் கூறப்பட்டது. இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இரு வேட்பாளர்களுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவுவதாகக் கூறப்படுகிறது. அதேபோல், அணி மாறும் மாகாணங்களில் எடுக்கப் பட்ட கருத்துக் கணிப்பு ட்ரம்ப்புக்கு சாதகமாக அமைந்துள்ளது. இந் நிலையில், இந்த 'ஹிப்போ ஜோசியம்' வீடியோ [illegible] பெற்றுள்ளது. [illegible]

## பிரித்தானியாவில் மேலும் இருவருக்கு குரங்கம்மை நோய்த்தொற்று

(லண்டன்)

பிரித்தானியாவில் மேலும் இருவருக்கு குரங்கம்மை நோய் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவை புதிய Clade 1B ரகக் கிருமியால் எற்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

ஏற்கெனவே பாதிக்கப்பட்ட முதல் நபர் ஆபிரிக்காவில் குரங்கம்மை நோய்த் தொற்று பரவிய பகுதிகளுக்குப் பயணம் செய்திருந்ததாக அதிகாரிகள் சென்ற வாரம் தெரிவித்தனர்.

மீண்டும் பிரித்தானியாவுக்குத் திரும்பிய அவருக்கு நோய் தொற்றியது கண்டறியப்பட்டது.

[illegible] இருவருக்கு நோய் பரவியுள்ளதாக மருத்துவப் பாதுகாப்பு அமைப்பு கூறியது. அதனால் குரங்கம்மை நோய்த் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை மூன்றுக்கு உயர்ந்துள்ளது.

பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் குறைவாக இருந்தாலும் ஒரே வீட்டில் வசிப் போரிடையே நோய்த் தொற்று எளிதாகப் பரவக்கூடும் எனக் கூறப் பட்டது.



கடந்த ஓகஸ்ட் மாதம் உலகச் சுகாதார நிறுவனம் குரங்கம்மை நோயை உலகப் பொதுச் சுதாதார நெருக்கடியாக அறிவித்தது.

இதுவரை ஜேர்மனி, சுவீடன், இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் Clade 1B ரகக் கிருமியால் ஏற்பட்ட நோய்த் தொற்றுச் சம்பவங்கள் கண்டறியப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2024



**கிரகநிலை -** இராசியில் சூரியன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் - பஞ்சம ஸ்தானத்தில் சனி(வ) - ரண ருண ரோக ஸ்தானத் தில் ராகு - அஷ்டம ஸ்தானத்தில் குரு(வ) - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் - அயன சயன போக ஸ்தா னத்தில் கேது என கிரகநிலை உள் ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று பஞ்சம ஸ்தானத்தில் சனி

## ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும்

வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 16.11. 2024 அன்று இராசியில் இருந்து சூரியன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** துணிச்சலாக காரியங் களில் ஈடுபடும் அதே நேரத்தில் நியா யமாகவும், நேர்மையாகவும் அதனை செய்து முடிக்கும் குணமுடைய துலா இராசியினரே! இந்தக் காலகட்டத்தில் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் இலாபம் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டா கும்.

தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விடயங் கள் அனுகூலமாக நடக்கும். உத்தியோ கத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும்படி தேவையான பொருட் களை வாங்கி கொடுப்பீர்கள். விருப் பங்கள் கைகூடும்.

அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிக நாட்டம் ஏற்படும்.

அரசியல்வாதிகள் கட்சி பிரச்சினை களில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. எதிர்க்கட்சியினரின் உதவி கிடைக்கும். கட்சித் தலைமை உங்களை நம்பி சில ரகசிய பொறுப்பை ஒப்படைக்கும். கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர்.

உங்களை உதாசீனப்படுத்திய நிறு




வனமே அழைத்து பேசும். மூத்த கலை ஞர்களிடம் சில நுணுக்கங்களை கற்றுத் தெளிவீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் தலை தூக்க செய்யும். எனவே சாதுரியமாகப் பேசி எதையும் சமாளிப்பது நல்லது. பொதுவான காரியங்களில் ஈடுபடும் போது கவன மாக இருப்பது நல்லது. வாகனங்களை பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**சுவாதி:** இந்த மாதம் எந்த ஒரு விவகாரத்தையும் எதிர்கொள்ளும் மனவலிமை உண்டாகும். எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல் லது. எதிர்பாராத சம்பவங்களால் இழு பறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பய ணங்கள் செல்ல நேரிடலாம். சந்திரன் சஞ்சாரம் உடல் ஆரோக்கியம் மனதில் உற்சாகத்தை தரும்.

**விசாகம்1, 2, 3ஆம்பாதங்கள்:** இந்த மாதம் அவ்வப்போது ஏதாவது தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக் கும். கடன் பிரச்சினைகள் குறையும். போட்டிகள் நீங்கும். வரவேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தி யோகத்தர்களுக்கு மறைமுக எதிர்ப் புகள் நீங்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டு கிடைக்கும்.

**பரிகாரம்:** மகாலட்சுமியை வணங்க கடன் பிரச்சினை தீரும். மன நிம்மதி கிடைக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன், வெள்ளி ;

**சந்திராஷ்டம தினங்கள்:** 16, 17

**அதிர்ஷ்ட தினங்கள்:** 10, 11



**கிரகநிலை -** இராசி ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் - சுக ஸ்தானத்தில் சனி (வ) - பஞ்சம ஸ்தானத்தில் ராகு - களத்திர ஸ்தானத்தில் குரு(வ) - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் - லாப ஸ்தானத்தில் கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன் என கிரகநிலை உள்ளது.

## தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும்

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று சுக ஸ்தானத்தில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று ராசியில் இருந்து சுக்கிரன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று இராசியில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து சூரியன் இராசிக்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எந்த ஒரு விடயத்திலும் அவசரம் காட்டினாலும் அதே நேரத்தில் அதில் உள்ள நன்மை தீமைகள் பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கும் விருச்சிக இராசியினரே! இந்த மாதம் வீடு, மனை, வாகனம் சம்பந்தமான காரி யங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். காரிய தடை தாமதம் ஏற்படும். எதிர் பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழு பறியாக இருக்கும். ஆனாலும் மனம் மகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும்.

தொழில் வியாபாரம் நன்றாக இருக் கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். கொடுக்கல், வாங்க லில் இருந்த சுணக்க நிலைமாறும். பண வரத்து இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர் பான பயணம் செல்ல வேண்டி இருக் கலாம். உங்களுக்கு நற்பெயர் கிடைப் பதில் எந்த இடையூறும் இருக்காது.

குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும்படியான சூழ்நிலைகள் மாறும். ஆனாலும் அனைத்து விடயங்களிலும் நீங்கள் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர் பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் பற்றிய கவலை உண் டாகும். நிதானமாக செய்யும் செயல்கள் வெற்றியை தரும்.

பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றி கரமாகச் செய்து முடிப்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. அரசி யல்வாதிகளின் செல்வாக்கு உயரும். தொகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது அவசியம். கட்சித் தலை மையின் அன்புக்கு பாத்திரமாவீர்கள்.

கலைத்துறையினர் புதுமையான




சில படைப்புகளை வெளியிட்டு அனை வரின் கவனத்தையும் ஈர்ப்பர். படைப் புகளை வெளியிட சில போராட்டங்களை சந்திக்க வேண்டி இருக்கும். மாண வர்களுக்கு கல்வி பற்றிய கவலை குறையும். அதிக மதிப்பெண் எடுக்க ஆர்வமாக படிப்பீர்கள்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீரும். எதை பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரிய த்தை செய்வதில் கண்ணும் கருத்து மாக இருப்பீர்கள். வீட்டிற்கு தேவை யான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கௌரவம் கூடும்.

**அனுஷம்:** இந்த மாதம் இழு பறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமான முடிவு பெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். உத்தியோகம் தொடர்பான பிரச்சினைகள் குறையும். தேவையான உதவி கிடைக்கும். கடன் பிரச்சினை குறையும். முன்னேறத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

**கேட்டை:** இந்த மாதம் வீண் பகைகள் ஏற்பட்டு விலகும். எவ்வளவு திறமையாக செயற்பட்டாலும் பாராட் டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். திடீர் கோபம் ஏற்படும். வீண் செலவும் இருக்கும். பிடிவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**பரிகாரம்:** திருமுருகாற்று படையை பாராயணம் செய்து வர கந் தன் அருளால் கண்டபிணி நீங்கும். குடும்ப கஷ்டம் தீரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி ;

**சந்திராஷ்டம தினங்கள்:** 18, 19, 20 ;

**அதிஷ்ட தினங்கள்:** 12, 13

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகளின் ஆதரவு தேவையில்லை

## ரில்வின் சில்வா உறுதிபடத் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் எந்தவித கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்திக்கே ஆதரவளிக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இதன்படி, அந்த தரப்பினர் சஜித் பிரேமதாசவிற்கே ஆதரவளித்தனர்.

எனவே தேர்தல் தொடர்பில் அவர்களுடன் எந்தவித கலந்துரையாடலிலும் தற்போது ஈடுபடவில்லை என்றும் ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (நி-8)

# டிசம்பர் முதல் இலத்திரனியல் அடையாள அட்டை

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் வாரங்களில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகம் ஆரம்பிக்கப்படும் என ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

இலத்திரனியல் அடையாள அட்டைக்கு பயன்படுத்தப்படும் சுமார் 2.3 மில்லியன் புதிய அட்டைகள் ஏற்கனவே கிடைத்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி புதிய இலத்திரனியல் அடையாள அட்டைகளில் தனி நபர்களை அடையாளப்படுத்தும் பயோ மெட்ரிக் அதாவது கைவிரல் அடையாளம், விழித்திரை, குருதி மாதிரிகள் உள்ளடக்கப்படுமென்று ஆட்பதிவு திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# 70 வீத வாக்காளர் அட்டைகள் இதுவரை விநியோகம்

## தபால் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

70 வீத உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாளை வரை வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அவற்றை விநியோகிக்கும் தபால் நிலையத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-8)

# சட்டத்தின் முன் அனைவரும் சமம்

## ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

நாட்டில் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதே தேசிய மக்கள் சக்தியின் நம்பிக்கை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியலுக்கு ஏதாவது ஒரு தரநிலை இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நம் நாட்டுக்கு அரசியலில் ஒரு தரம் வேண்டும். அரசியல்வாதி நினைத்ததைச் செய்யலாமா? இல்லை. அதற்கு ஒரு அளவுகோல் இருக்கிறது.



அரசியல்வாதி ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பில் செயற்பட வேண்டும். அரசியல்வாதி சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். அரசியல்வாதி நாகரீகமான சட்டத்தில் இருக்க வேண்டும்.

பதிவு செய்யப்படாத வாகனங்கள், சுங்க வரியை முறையாக செலுத்தாமல் சுங்கச் சாவடியில் இருந்து ஓட்டிச் செல்லும் வாகனங்கள். சில வாகனங்களைப் பார்த்தால், அவை இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படவை.

அதுதான் நம் நாட்டின் அரசியல் கலாசாரம். எனவே, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கருத்துக்கு உயிர் கொடுக்கிறோம். நாங்கள் அதை செய்கிறோம்.

நீங்கள் நமது நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும் பொதுச் சொத்தை உங்கள் விருப்பப்படி பயன்படுத்த முடியாது. அப்படிப்பட்ட அரசியல் எங்களுக்கு தேவையில்லை எனத் தெரிவித்தார். (நி-8)

# இராசிபலன்

06.11.2024
ஐப்பசி 20, புதன்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.17 மணிவரை

மூலம் முற்பகல் 9.41 மணிவரை
சுபநேரம் -4.35-6.05 மணிவரை
இராகுகாலம் -12.05-1.35 மணிவரை

ஸ்கந்த பஞ்சமி
சந்திராஷ்டமம்: ரோகிணி

வளவன்




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.




உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.




வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.




பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.




குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வாய்ப்புக்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.




பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விலகிச் சென்றவர்கள் விருப்பி வந்திணைவர், களஸ்திர நன்மையுண்டு.




பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.




ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் , தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**ஒரு குழந்தைக்குத் தாய் இருக்கும் இடம் தான் சொர்க்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய சிங்கப்பூர் பத்திரிகையாளர் மன்றம்



(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூர் பத்திரிகையாளர் மன்றத்தின் தலைவர் பேட்ரிக் டேனியல் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தனர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் இச் சந்திப்பு இடம் பெற்றது.

வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறைக்கான போக்குவரத்து வசதி வாய்ப்புகள் தொடர்பாகவும் வடக்கு மாகாண அபிவிருத்தி சார்ந்த செயற்பாடு கள் தொடர்பாகவும். தற்போதைய பொருளாதார நிலை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. வடக்கு மாகாணத்தில் இருந்து உற்பத்திகளை வெளி நாட்டு சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்தல் தொடர்பாகவும் வினவப்பட்டதுடன் மீன்பிடி, விவசாயம், கால்நடைகளின் உற்பத்தி தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் உரையாடப்பட்டது.

அத்துடன் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு தடையாக உள்ள காரணிகளை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். (நி-8)



உரும்பிராய் ஞான வைரவர் சனசமூக நிலையத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் நடைபெற்றது

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 380 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 400 |
| தக்காளி | 300 | 280 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 230 | 150 |
| கோவா | 180 | 250 | 250 |
| கரட் | 200 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 150 |
| புடோல் | 180 | 150 | 200 |
| வாழைக்காய் | 100 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 280 | 350 |
| பாகறகாய | 550 | 450 | 600 |
| வெண்டக்காய் | 100 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 260 | 200 |
| பயற்றங்காய் | 350 | 200 | 300 |
| லீக்ஸ | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 600 | 350 | 600 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 200 |
| போஞ்சி | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 350 | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 150 |
| தேசிக்காய் | 350 | 400 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 120-180 |
| இராசவள்ளி | 900 | 650 | 1200 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 500 |
| முள்ளங்கி | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 60 | 200 |

## இன்று ஒரு தகவல் 256



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# பணம் பாதகம் செய்யும்!

ஒரு ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அந்த ஊரிலே இருந்த இளைஞர்கள் சிலரை கூப்பிட்டு வைத்து உபதேசம் செய்தார். பணத்தை அறவழியிலே தேட வேண்டும். தகாத வழியிலே தேடுகின்ற பணம் வந்த வழியிலே திரும்பப் போய்விடும் என்றார். அது மட்டுமில்லை. பணம் நண்பர்களை கூட விரோதிகளாக மாற்றிவிடும் என்றார். இளைஞர்களிலே ஒருவர் எழுந்தான். விபரம் தெரியாமால் பேசாதீர்கள் பெரியவரே என்றான். அவர் நிமிர்ந்து பாரத்தார்.

இதோ பாருங்கள் நாங்கள் நான்கு பேர் இருக்கின்றோம். நாங்கள் நான்கு பேரும் இணைபிரியாத நண்பர்கள். எந்தப் பணமும் எங்கள் நட்பை எதுவும் செய்து விட முடியாது என்று சவால் விட்டான். மற்றவர்களும் தலையை ஆட்டினார்கள். பெரியவர் ஒன்றும் சொல்லவில்லை. சிரித்துக் கொண்டே போய்விட்டார். அதற்கு பின் ஒரு நாள். வழக்கம் போல இந்த நான்கு நண்பர்களும் ஒரு மலையடிவாரத்திலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். பக்கத்திலே ஒரு மலைக்குகை இருந்தது. அதன் உள்ளே ஒரு சாமியார் தியானம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு சமயம் கண்ணைத் திறந்து பாரத்தார். அவ்வளவு தான். அலறியடித்துக் கொண்டே வெளியே ஓடிவந்தார். சாவு என்னைத் துரத்துகின்றது என்று சொல்லிக்கொண்டே ஓடினார். இளைஞர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இந்த சாமியார் இப்படி கத்திக்கொண்டு ஓடுகின்றார் என்று நினைத்துக் கொண்டே குகைக்குள் ஓடிப்போய்ப் பார்த்தார்கள்.

அங்கே போய்ப் பார்த்தால் ஒரு ஆச்சரியம். விலை மதிக்க முடியாத வைரங்கள், நகைகள், தங்கக்காசுகள் குவியல் குவியலாகக் கிடந்தது. இவ்வளவு பெரிய செல்வத்தைப் பார்த்து விட்டு இந்த ஆள் இப்படி அலறியடித்துக் கொண்டு ஓடுகின்றாரே என்று நினைத்து அவருக்காக பரிதாபப்பட்டார்கள்.அங்கே கிடந்த நகைகளையும் காசுகளையும் ஆசையாகக் கையிலே அள்ளிப் பார்த்தார்கள். அந்த நான்கு பேரும் சரி இதை இப்படி நான்கு பங்காகப் போட்டு ஆளுக்கு எவ்வளவு கிடைக்கும் என்று கேட்க ஆரம்பித்தான் ஒரு ஆள். நான் இதை முதலிலே பார்த்தேன். அதனாலே எனக்குக் கொஞ்சம் அதிகமாக கொடுப்பது தான் முறை என்றான் ஒருவன்.

உனக்கு முன்னாலே நான் தான் பார்த்தேன் என்றான் இன்னொருத்தன். கொஞ்ச நேரம் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டிருந்தார்கள். அதற்குப்பின் ஆள்ஆளுக்கு அங்கேயிருந்த இரும்புக் கம்பிகளை எடுத்துக் கொண்டார்கள். அடித்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். அதிலே ஒரு ஆள் இறந்து விட்டான். இன்னொருவனுக்கு பலமான காயம். இறந்தவனைப் பார்த்ததும் மற்ற மூன்று பேரும் சமரசத்திற்கு வந்தார்கள்.

சரி நடந்தது நடந்து விட்டது. இனிமேல் நடக்க வேண்டியதை யோசித்துப் பார்ப்போம் இவன் இறந்து போனது யாருக்கும் தெரியக்கூடாது. இவனை இங்கேயே புதைத்து விடுவோம். நாங்கள் மூன்று பேரும் இதை பங்கு போடுவோம் என்கின்ற முடிவுக்கு வந்தார்கள்.

அதற்குள்ளே அவர்களுக்க பசி ஆரம்பித்து விட்டது. ஒருவனை சாப்பாடு வாங்குவதற்கு அனுப்பினார்கள். ஆரம்பத்திலே அவன் தயங்கினான். திரும்பி வருவதற்குள்ளே இவர்கள் இரண்டு பேரும் இருக்கிறதை சுருட்டிக்கொண்டு ஓடிப்போய்விட்டால் என்ன செய்வது என்கின்ற தயக்கம்

இருந்தாலும் அவர்கள் இரண்டு பேரும் உறுதி சொல்லி அனுப்பினார்கள். இப்படியெல்லாம் செய்யமாட்டோம். தைரியமாக போய் வா என்று. அவன் சென்றான். அதற்கு பின் என்ன நடந்தது தெரியுமா? இங்கே அடிபட்டு கிடக்கின்றானே அவனுக்கு மூச்சுத் திணற ஆரம்பித்தது. தண்ணீர் தண்ணீர் என்று கத்தினான். பக்கத்திலே இருந்தவன் அதை கண்டுகொள்ளாமல் போய்விட்டான். அவன் இறந்து விட்டால் ஒரு பங்கு குறையுமே என்கின்ற நினைப்பு.

சாப்பாடு வாங்கப் போனவன் திரும்பி வந்தான். இவன் எப்படி இறந்து போனான் என்று கேட்டான். அடுத்தவன் பார்த்தான். இப்படித் தான் இறந்து போனான் என்று சொல்லி அவன் தலையிலே இரும்புக் கம்பியாலே ஓங்கி அடித்தான். அவ்வளவு தான் சாப்பாடு வாங்கிக்கொண்டு வந்தவனும் இறந்து விட்டான். இப்போது இருக்கின்றது ஒரே ஆள். அப்பாடா தொல்லை விட்டது என்று நினைத்தான். அவசர அவசரமாக அவன் வாங்கிக் கொண்டு வந்த சாப்பட்டை சாப்பிட்டான். நகைகள் எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பினான். அவ்வளவு தான் தலை கிறு கிறு என்று சுத்தியது. கண் இருண்டது. மயங்கி கீழே விழுந்தான். அவனும் இறந்து விட்டான்.

என்ன நடந்தது தெரியுமா? சாப்பாடு வாங்கப் போனவன் அதிலே விஷத்தைக் கலந்து கொண்டு வந்திருக்கின்றான் அவனைக் கொல்லுவதற்காக. கடைசியிலே அந்தச் செல்வம் கேட்பாரற்றுக் கிடந்தது. அதற்கு போட்டி போட்டவர்கள் அதை அனுபவிக்க முடியாமல் அழிந்து போனார்கள். பணம் நண்பர்களைக் கூட விரோதிகளாக மாற்றிவிடும் என்று பெரியவர் சொன்னாரே. அது எந்தளவு உண்மையாகப் போய்விட்டது பார்த்தீர் களா?வாழ்க்கைக்கு பணம் அவசியம் தான் இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும் அதை முறையாக சம்பாதிக்க வேண்டும். முறையாகப் பயன்படுத்த வேண்டும். அது தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது.

என் நண்பண் ஒருவனிடம் இந்தக் கதையைச் சொன்னேன். சொல்லிவிட்டுக் கேட்டேன். நாங்கள் இரண்டு பேரும் கடற்கரைக்குப் போவதாக வைத்துக் கொள்ளுவோம். அங்கே மணலிலே ஒரு தங்க மோதிரம் இருக்கிறது. அதை நான் பார்க்கின்றேன். எடுத்து உன்னிடம் கொடுக்கின்றேன். அந்த மோதிரம் எங்களுடைய ஆழ்ந்த நட்பைப் பிரித்து விடும் என்று நினைக்கின்றாயா? என்றேன்.

பிரிக்கின்ற அளவுக்கு நீங்கள் நடந்து கொள்ள மாட்டீர்கள் என்றார். எப்படி? என்று கேட்டேன். உங்கள் கண்ணிலே அது தெரிந்தால் அதன்பின் அதைப்பற்றி என்னிடம் வாயைத்திறந்து சொல்லவே மாட்டீர்கள். அப்புறம் எப்படி எமக்குள்ளே சண்டை வரும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கான முன்னாயத்த பணிகள் தொடர்பான கலந்துரையாடல்

(தருமபுரம்)

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான முன்னாயத்தப் பணிகள் கிளிநொச்சிமாவட்டத்தில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஓர் அங்கமாக கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களின் வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு நேற்று நடைபெற்றது.



குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வலய உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களிற்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பதில் உதவித் தேர்தல் ஆணையாளர் டி.சி.அரவிந்தராஜினால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வலய உதவி தெரிவத்தாட்சி அலுவலகர்களாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (நி-8-316)

# சைவபரிபாலன சபை நடத்தும் பரீட்சைக்கான

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் அகில இலங்கை சைவநெறி, தமிழ்மொழியும் நுண்ணறிவும் பரீட்சை எதிர்வரும் ஜனவரி 25 ஆம் திகதி (25.01.2025) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அதற்கான விண்ணப்பங்கள் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அவ் விண்ணப்பங்களை 10.11.2024 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும் என்பதனை பாடசாலைகளுக்கு அறிய தருகின்றோம்.

விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகளும் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் அலுவலகத்துடன் தொடாபு கொண்டு (021 222 7678) பெற்றுக் கொள்ளலாம் என யாழ். சைவபரிபாலன சபை செயலாளர் அறிவித்துள்ளார். (நி-8)

# சீத்துவக்கேடு

## நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய "சீத்துவக்கேடு" என்ற தொலைந்து விட்ட வாழ்வியல் நினைவுகள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு நூலின் அறிமுக விழா எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் காரை சுந்தரம்பிள்ளை அரங்கில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும் கௌரவ விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவனும் சிறப்பு விருந்தினர்களாக ஜீவ நதி சஞ்சிகை ஆசிரியர் க.பரணீதரன், எங்கட புத்தகங்கள் குமும நிறுவுநர் கு.வசீகரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8-33)

# மாமியார் மீது துப்பாக்கிச் சூடு மருமகன் தலைமறைவு

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் இளைஞர் ஒருவர் நாட்டுத் துப்பாக்கியைப் பயன்படுத்தி மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த பெண்ணின் வீட்டிற்கு சென்ற அவரது மருமகன் நாட்டுத் துப்பாக்கியால் பெண்ணின் வாய்ப்பகுதியில் சுட்டுள்ளார். இதனால் படுகாயமடைந்த பெண் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் சுந்தரபுரம் பகுதியைச்சேர்ந்த 54 வயதான பெண்ணே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈச்சங்குளம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (நி-8-250)

# வெளிநாட்டு ஆசைகாட்டி மோசடி செய்தவருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைப்பதாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரிடம் 14 இலட்சத்து 50ஆயிரம் ரூபாயை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதாக 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தினை பெற்றுக் கொண்டவர் இளைஞனை வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இளைஞன் அது தொடர்பில் யாழ் . மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சாவகச்சேரிப் பகுதியில் வைத்து சந்தேக நபரை கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து யாழ். நீதவான் நீதிமன்றில் இளைஞனை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்படுத்திய வேளை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (நி-8-33)

# வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தெல்லிப்பளை பிரதேச செய லாளர் பிரிவின் அளவெட்டிப் பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும் மற்றும் இசைவாத்தியக் கருவிகள் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

எனவே குறித்த பாடநெறிகளை கற்பிக்க ஆர்வமு டைய தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளவாளர்கள் (ஆசிரியர்கள்) தங்களது சுயவிபரங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் தெல்லிப்பளை, அளவெட்டி தெற்கு, அளவெட்டி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு அளவெட்டி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (நி-8)



தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் வடமாகாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக மேற்கொண்ட 150 மணித்தியால பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதல் வழங்கும் நிகழ்வு மற்றும் கலை நிகழ்வு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் சிரேஷ்ட மொழிப்பாட தேசிய வளவாளர் ஈ. சாகரிகா பிகிறாடோ தலைமையில் இடம் பெற்றது.

# நீரிழிவு தொடர்பில் விழிப்பூட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நீரிழிவு தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு நேற்று இடம் பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும் யாழ் நீரிழிவு சிகிச்சை நிலையமும் இணைந்து முன்னெடுத்து இருந்தது.

யாழ்.நீரிழிவு கழக செயலாளர் க.கணபதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நீரிழிவு சிகிச்சை நிலைய பொது வைத்திய நிபுணர் மருத்துவர் ம.அரவிந்தன் கலந்து கொண்டு விழிப்புணர்வு தொடர்பில் விளக்கமளித்திருந்தார்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நீரிழிவுக் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (6-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 624





பட்டாணியர்கள் துருக்கர்கள், மொகலாயர்கள், அராபியர்கள் என்னும் சாதியினர் பொங்கிக் கிளம்பி எந்தப் புது நாட்டைக் கைப்பற்றலாம் என்று புறப்பட்டிருக்கிறார்கள். ஆயிரம் வருடங்களுக்கு முன்பு யவனர்களும், ஹூணர்களும் படையெடுத்து வந்ததுபோல் இந்தப் புதிய மதத்தினர் இப்போது அணிஅணியாக இந்நாட்டின் மீது படையெடுக்கப் புறப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களுடைய மதம் விசித்திரமான மதம். கோவில்களை இடிப்பதும் விக்கிரகங்களை உடைப்பதும் புண்ணியம் என்று நம்புகிறவர்கள். அம்மணி! இவர்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய பேரரசர்கள் யாரும் இப்போது வடநாட்டில் இல்லை. சோழநாட்டு வீரர்கள் கங்கை நதி வரையில், அப்பால் இமயமலை வரையில் சென்று பெரிய பாரத சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார்கள் என்றும், கோயில்களை இடிக்கும் கூட்டங்களைத் தடுத்து நிறுத்தப் போகிறார்கள் என்றும் அடியேன் கனவு கண்டு வந்தேன். அந்தக் கனவை நனவாக்கத் தாங்கள் உதவி செய்யுங்கள். மதுராந்தகருக்குப் பட்டம் கட்டச் சம்மதித்துச் சோழநாட்டில் தாயாதிச் சண்டை ஏற்படாமலிருக்க உதவி புரியுங்கள்!"

இதைக்கேட்ட செம்பியன் மாதேவி சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பின்னர், "ஐயா! ஏதேதோ இந்தப் பேதைப் பெண்ணுக்கு விளங்காத விடயங்களைச் சொல்லி என்னைக் கலங்கடித்து விட்டீர்கள். இந்தப் புண்ணிய பாரத பூமிக்கு அப்படிப்பட்ட ஆபத்து நேரிடுவதாயிருந்தால் அதை சர்வேசுவரன் பார்த்துத் தடுக்க வேண்டுமே தவிர இந்த அபலையினால் என்ன செய்ய முடியும்? என்னுடைய கணவர் இறைவனடியைச் சேரும் சமயத்தில் எனக்குச் சொல்லிவிட்டுப் போனதை ஒரு நாளும் நான் மறக்க மாட்டேன். அதற்கு விரோதமான காரியம் எதுவும் நான் செய்ய மாட்டேன்!" என்றார்.

"அப்படியானால் இது வரையில் தாங்கள் அறியாத ஓர் உண்மையை இப்போது நான் தெரியப்படுத்தியாக வேண்டும்!" என்றார் அநிருத்தர்.

இச்சமயத்தில் மதுராந்தகன் அங்கே தடபுடலாகப் பிரவேசித்து, "அம்மா! இது என்ன நான் கேள்விப்படுவது? அருள்மொழிவர்மனைக் கடல் கொண்டு விட்டதா?" என்று கேட்டான்.

"பெருமாட்டி! தங்கள் செல்வக் குமாரருக்கு ஆறுதல் சொல்லுங்கள். நான் சொல்ல விரும்பியதை இன்னொரு சமயம் சொல்லிக் கொள்கிறேன்" என்று முதன் மந்திரி கூறி விட்டுக் கிளம்பினார்.

அவர் வாசற்படி தாண்டியதும், "இதோ போகிறாரே, இவர்தான் என்னுடைய முதன்மையான சத்துரு. நான் இங்கிருக்கும் போதே தங்களுக்குத் துர்போதனை செய்ய வந்து விட்டார் அல்லவா?" என்று இளவரசர் மதுராந்தகன் கூறியது அநிருத்தரின் காதிலும் விழுந்தது.

### 27ஆம் அத்தியாயம் குந்தவையின் திகைப்பு

முதன் மந்திரி அநிருத்தர் குந்தவையின் அரண்மனையை அடைந்தார். இளவரசி அவரைப் பார்த்ததும் எழுந்து நின்று நமஸ்கரித்தாள்.


வீரத்திலும் குணத்தி லும் சிறந்த கணவனை அடைந்து நீடுழி வாழ்வாயாக!" என்று முதன் மந்திரி அநிருத்தர் ஆசீர்வதித்தார். "ஐயா! இந்தச் சமயத்தில் இத்தகைய ஆசீர்வாதத்தைத் தானா செய்வது?" என்றாள் இளவரசர். "ஏதோ இக்கிழவனுக்குத் தெரிந்த ஆசியைக் கூறினேன். வேறு எந்த ஆசியைக் கோருகிறாய் அம்மா?"

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

# சுண்டெலி மனிதனாக மாறிய கதை



ஒரு ஞானியின் தியானம் கலைந்த போது ஒரு சுண்டெலி ஞானியின் முன் வந்தது. சுண்டெலியை பார்த்து ஞானி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். பூனையை கண்டு எனக்கு பயமாய் இருக்கிறது. என்னை ஒரு பூனையாக மாற்றிவிட்டால் உங்களுக்கு புண்ணியமாக இருக்கும் என்றது எலி. ஞானி எலியை பூனையாக மாற்றினார்.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் அப்பூனை வந்து ஞானியின் முன் நின்றது. பூனையைக் கண்ட ஞானி இப்போது என்ன பிரச்சினை என்று கேட்டார். என்னை எப்போதும் நாய் துரத்துகிறது. என்னை நாயாக மாற்றிவிட்டால் நன்றாக இருக்கும் என்றது பூனை. உடனே பூனையை நாயாக மாற்றினார் ஞானி. சில நாட்கள் கழித்து அந்த நாய் வந்து ஞானியின் முன்பு நின்றது.

இப்போது உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் ஞானி. புலி பயம் என்னை வாட்டி எடுக்கிறது. தயவு செய்து என்னை புலியாக மாற்றிவிடுங்கள் என்றது நாய். ஞானி நாயை புலியாக மாற்றினார்.

சில நாட்கள் கழித்து ஞானி முன் வந்து நின்ற புலி இந்தக் காட்டில் வேடன் என்னை வேட்டையாட வருகிறான். தயவு செய்து என்னை வேடனாக மாற்றிவிடுங்கள் என்றது புலி. உடனே புலியை வேடனாக மாற்றினார் ஞானி. சில நாட்கள் கழித்து வேடன் ஞானி முன் வந்து நின்றான். இப்போது உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் ஞானி. எனக்கு மனிதர்களை கண்டால் பயமாக இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்தான். உடனே இடைமறித்த ஞானி சுண்டெலியே உன்னை எதுவாக மாற்றினால் என்ன? உன் பயம் உன்னை விட்டு போகாது. உனக்கு சுண்டெலியின் இதயம்தான் இருக்கிறது.

நீ சுண்டெலியாக இருக்கத்தான் லாயக்கு என்று கூறிவிட்டார் அந்த ஞானி. ஆகையால், உள்ளத்தில் நம்பிக்கைகளையும் அச்சமற்ற தன்மையும் இல்லாத வரை நாம் எதையும் அடையவோ, சாதிக்கவோ முடியாது. உங்களைப் பற்றி நீங்கள் எப்படி எண்ணுகிறீர்களோ அப்படித்தான் ஆவீர்கள். நீங்களே உங்களை தாழ்த்திக்கொள்ளாதீர்கள்.

உங்களுடைய எண்ணங்கள் செயலற்று போனால் அச்சம் சோர்வு போன்றவை உடலை கூனாக்கி உள்ளத்தை மண்ணாக்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நல்லெண்ணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருப்பவரே அமைதியைக் கொடுக்கும் மிகப் பெரிய வள்ளல் ஆவார். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சமூகவலைத்தள விமர்சனங்களில் நயத்தக்க நாகரிகத்தைப் பேணுங்கள்

ஒரு காலத்தில் பத்திரிகைகளே செய்திகளை எடுத்துச் செல்கின்ற பணியை ஆற்றின.

தொடர்ந்து பத்திரிகைகளோடு வானொலிகளும் தொலைக்காட்சி சேவைகளும் இணைந்து கொண்டன.

எனினும் நவீன தகவல் தொழில்நுட்பத்தின் அபரிதமான வளர்ச்சி காரணமாக சமூக வலைத்தளங்கள் அறிமுகமாகின.

இப்போது மக்கள் மத்தியில் சமூக வலைத்தளங்கள் வியாபகம் பெற்றுள்ளன.

பொதுவில் சமூகவலைத்தளங்கள் மிக வேகமாகச் செய்திகளைப் பரப்புவதுடன் பொதுமக்களின் கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற களமாகவும் விளங்குகின்றன.

அதேநேரம் கருத்துருவாக்கங்களும் விமர்சனங்களும் சமூகவலைத்தளங்களில் கொடி கட்டிப் பறக்கின்றன.

தவிர, உலகம் முழுவதையும் இணைக்க வல்ல ஊடகமாக சமூகவலைத்தளங்கள் விளங்குகின்றன என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஆனால் தனி மனித கௌரவத்தை கடித்துக் குதறுகின்ற அளவில் சமூக வலைத்தளங்கள் செயற்படுவதுதான் மிகப்பெரிய வேதனை.

ஆம் மனச்சாட்சி, உண்மை, மனிதநேயம், நடுவுநிலை என்ற அறம் சார்ந்த விடயங்கள் அத்தனையும் செல்லுபடியற்றதாகிப் போய் யாருடைய கௌரவத்தையும் பாதிக்கும் வகையில் எவரும் எதுவும் எழுதலாம் என்ற நிலைமையை சமூகவலைத்தளங்கள் தோற்றுவித்துள்ளன.

அதாவது எந்தவிதமான ஒழுக்க நியமங்களும் பின்பற்றப்படாமல், அபாண்டமான விமர்சனங்களை முன்வைக்கும்போது அஃது மக்கள் சமூகத்தில் வக்கிரத்தனங்களை ஏற்படுத்திவிடும்.

அதுதவிர, மனச்சாட்சி பற்றி - மனித நேயம் பற்றி இம்மியும் சிந்திக்காதவர்கள், தமது வக்கிரபுத்தியால் மிக மோசமான விமர்சனங்களையும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கும்போது, அது மிகப் பாரதூரமான பாதிப்புக்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படுத்திவிடுகிறது.

ஆக, எதையும் நயத்தக்க நாகரிகத்துடன் வெளிப்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்வதன்மூலம் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி இந்த மானுடம் வாழ்வதற்கு வழி செய்யுங்கள்.

ஏனெனில் இப்போது அபாண்டமான விமர்சனங்கள் உங்களுக்கு தற்காலிகமான ஆறுதலையும் திருப்தியையும் தரலாம்.

ஆனால் மற்றவர்கள் மனம் நொந்து வேதனைப்படும்போது, அதனால் ஏற்படுகின்ற எதிர்விளைவு பின்னடி காலத்தில் உங்களுக்கும் துன்பத்தைத் தரும் கவனம்.

# ஈழத் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும்

## நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தீர்மானம்

(சென்னை)

ஈழத்தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும் என நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இலங்கை தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் போது, இந்திய மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்தின் ஆலோசனையையும் பெற வேண்டும் என்று நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தீர்மானித்துள்ளது.

இதற்கான விசேட தீர்மானம் ஒன்று கட்சியினால் கடந்த தினம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றுக்கான அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அண்மையில் தமது அரசியல் பிரவேசத்தை அறிவித்து, அவரது கட்சியின் மாநாட்டை மிகப் பிரமாண்டமாக நடத்தியிருந்தார்.

தற்போது அவர் புதிய தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றையும் ஆரம்பிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. -(ம-7)

## கிராமிய வறுமையை ஒழிப்பதே அரசின் பிரதான நோக்கம்

### ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

அடுத்த ஐந்து வருடங்களில் கிராமிய மக்களின் வறுமையை இல்லா தொழித்து கிராமிய மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துடன் நேற்று செவ்வாய்க்கிழமை (05) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அந்த வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு அரச அதிகாரிகளின் ஆதரவு மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அரச அதிகாரிகளின் அனுபவமானது அதற்கு பெரும் உறுதுணையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் அரச சேவைகள் செயற்படும் விதத்திற்கும் இடையில் சில இடைவெளி காணப்படுவதாகவும், நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு இதுவரையில் அரச நிர்வாகம் செயற்பட்டு வந்த விதத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டில் மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது அரசாங்கத்தின் முக்கிய பணி எனவும், மோசடி மற்றும் ஊழல் காரணமாக நாட்டின் திட்டங்களை நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், அரச சேவையில் அரசியல் ரீதியிலான தலையீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும், அரச உத்தியோகத்தர்களுக்கு சுதந்திரமாக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பிரதேச அபிவிருத்திக்காக அரச அதிகாரிகளுக்கு விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மக்கள் சேவைகளை குறைக்காமல் அரச சேவையில் மேற்கொள்ளப்படும் தேவையற்ற செலவுகளை குறைக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## இரண்டு நெடுவரிசையாக வாக்குச் சீட்டுக்கள்

பாராளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் மூன்று மாவட்டங்களைத் தவிர, ஏனைய சகல மாவட்டங்களிலும் உள்ள சகல தேர்தல் தொகுதிகளிலும் வாக்குச் சீட்டுகளை இரண்டு நெடுவரிசைகளாக அச்சிட தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, வாக்குச் சீட்டுகளின் கீழ்ப் பகுதியில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களின் எண்ணிக்கையுடன்பொருந்தும் வகையில் இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்குமென்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு குறித்து நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரித்து மனு நீக்கப்பட்டுள்ளது.

எனவே, தேர்தலுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் எந்தச் சிக்கலும் இல்லை. எதிர்வரும் 14ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அவசியமாக சகல பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தெரிவத்தாட்சி அதிகாரிகள் கொழும்புக்கு அழைப்பு

மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் இன்று கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசிக்கும் வகையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் செயலகத்தில் இன்று இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## விபத்து; யுவதி மரணம்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியில் நேற்று சம்பவித்த கோர விபத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை, பொல்கொட பிரதேசத்தில் பஸ் ஒன்றுடன் முச்சக்கர வண்டி மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் முச்சக்கர வண்டியின் பின் ஆசனத்தில் பயணித்த யுவதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த யுவதி வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

## பொதுத் தேர்தல் தொடர்பில் 1,642 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் இதுவரை 1,642 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பாக 1592 முறைப்பாடுகளும், வன்முறைகள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும், ஏனைய தேர்தல் குற்றங்களின் அடிப்படையில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேநேரம் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் 1365 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ள அதேநேரம், 277 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை 01 - 30, 2024

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்"

மார்டின் லூதர்
(ஜேர்மனிய கிறிஸ்தவ மதகுரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வேட்டையன்' ஸ்ரார்க்

## தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது ஆஸி




பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. மெல்போர்னில் முதல் போட்டி நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

பாகிஸ்தான் அணிக்கு பாபர் அசம் (37), அணித் தலைவர் மொகமட் ரிஸ்வான் (44), நசீம் ஷா (40) கைகொடுத்தனர். இர்பான் கான் (22), ஷாஹீன் அப்ரிடி (24) ஆறுதல் தந்தனர். பாகிஸ்தான் அணி 46.4 ஓவரில் 203 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அவுஸ்திரேலியா சார்பில் ஸ்ரார்க் 3, கம்மின்ஸ், ஷாம்பா தலா 2 விக்கெட் சாய்த்தனர்.

சுலப இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு ஸ்ரீவ் ஸ்மித் (44), ஜோஷ் இங்லிஸ் (49) நம்பிக்கை தந்தனர். லபுசேன் (16), ஆரோன் ஹார்டி (10), மக்ஸ்வெல் (0) சோபிக்கவில்லை. பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் கம்மின்ஸ் (32*) அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். அவுஸ்திரேலிய அணி 33.3 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

**71 வெற்றி**

ஒருநாள்போட்டியில்பாகிஸ்தானுக்கு எதிராக அதிக வெற்றி பெற்ற அணிகளுக்கான பட்டியலில் முதலிடத்தை மே.தீவுகளுடன் பகிர்ந்து கொண்டது அவுஸ்திரேலியா. இரு அணிகளும் தலா 71 போட்டியில் வெற்றி பெற்றன. அடுத்த மூன்று இடங்களில் இலங்கை (59), இங்கிலாந்து (57), இந்தியா (57) உள்ளன. (ம-7)


15 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் காசிப்பிள்ளை செல்லத்துரை



பிறப்பு 03.02.1939 இறப்பு 23.11.2009

எமது அன்புத் தந்தையே!
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்,
எம் மனதை விட்டு நீங்காது உங்கள் நினைவலைகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்

டச்றோட், உடுவில். (2580)


# டேர்பனில் இந்தியா

## ரி20 தொடருக்கு ரெடி

ரி20 தொடரில் பங்கேற்கும் இந்திய அணி, தென்னாபிரிக்கா சென்றது.

தென்னாபிரிக்க மண்ணில் இந்திய அணி நான்கு போட்டி கொண்ட ரி20 தொடரில் பங்கேற்க உள்ளது. இதில் பங்கேற்கும் சூர்யகுமார் தலைமையிலான இந்திய அணியினர், தென்னாபிரிக்காவின் டேர்பன் சென்று சேர்ந்தனர்.

இங்குள்ள கிங்ஸ்மீட் மைதானத்தில், முதல் ரி20 போட்டி நவ. 8ல் நடக்க உள்ளது. அடுத்து ஜிகுபெர்ஹா (10), செஞ்சுரியன் (13), ஜோகனஸ்பேர்க் (15) என நான்கு மைதானங்களில் போட்டிகள் நடக்கவுள்ளன.

இந்திய அணிப் பயிற்சியாளர் காம்பிர், அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடருக்கு தயாராகி வருகிறார். தென்னாபிரிக்க தொடரில் தற்காலிக பயிற்சியாளராக லட்சுமண் நியமிக்கப்பட்டுள்ளார். தவிர இந்திய அணியில் அபிஷேக், சஞ்சு சாம்சன், ரிங்கு சிங், திலக் வர்மா, சகலதுறை வீரர்களாக ஹர்திக் பாண்ட்யா, அக்சர் படேல், சுழலில் வருண் சக்ரவர்த்தி, ரவி பிஷ்னோய், வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். (ம-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3254

### றுக்ஷா

எதுக்காக விவாகரத்து கேட்கிறா நீ?

சில உண்மைகளை மறைச்சு கல்யாணம் பண்ணிட்டாங்க யுவர் ஆனர்

அப்படி, என்ன உண்மைகளை மறைச்சுட்டாங்க?

பொண்ணுக்கு கராத்தே, குங்ஃபு, குஸ்தி எல்லாம் தெரியும்னு சொல்லாம மறைச்சுட்டாங்க யுவர் ஆனர்

### விதுசனா

டேய்... இப்போதான் தீபாவளி முடிச்சு முதலாம் திகதி தாண்டா வந்திருக்கு... சம்பளம் இன்னும் வரல கொஞ்சம் பொறுங்கடா...




### பகீரதன்

பணம் வச்சிருக்கவன் நகை வாங்குறான்...
பணம் இல்லாதவன் வட்டிக்கு கடன் வாங்குறான்...



இரண்டுக்கும் முடியாதவன் பொண்டாட்டி கிட்ட திட்டு வாங்குறான்

### கருணிகா



"சோறு" பொங்கும் போது தீயைக் குறைக்கனும்...
"கோபம்" பொங்கும் போது வாயைக் குறைக்கனும்...

### மலரவன்

என்ன தைரியம் இருந்தா கூட படிக்குற பிள்ளைக்கே லவ் லெட்டர் குடுத்திருப்ப..?



அது லவ் லெட்டர் இல்லை சார்... "விருப்பு மனு"

### பர்மிகன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி அநுர குமார மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதி மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கோட்டை - ஒபேசேகரபுர பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலை சூத்திரம் தவறு எனக் கருத்துத் தெரிவித்த அநுர குமார திஸாநாயக்க, இன்று எரிபொருள் விலைச் சூத்திரத்தின் அடிமையாக மாறியுள்ளார்.

எரிபொருள் விலையைக் குறைப்பதாகக் கூறிக்கொண்டு செல்வந்த உயர் வர்க்கத்தினர் பயன்படுத்தும் வாகனங்களுக்குத் தேவைப்படும் எரிபொருளுக்கான விலையை மட்டுமே குறைத்துள்ளார்.

கடவுச்சீட்டுக்குக் காணப்படும் வரிசைக்குத் தீர்வைத் தருவோம் என்று கூறினாலும், இன்றும் கடவுச்சீட்டுக்கான வரிசை அதிகரித்து வருகிறது. இவர்கள் நாட்டு மக்களை நாளுக்கு நாள் ஏமாற்றி வருகின்றார்கள்.

அரச பணியாளர்களுக்கு 6 மாதங்களுக்கு ஒரு தடவை வேதனத்தை அதிகரிப்பதாகக் கூறினர், என்றாலும் இதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த இரட்டை நிலைப்பாடான அரசியலால் முழு நாடுமே ஏமாற்றமடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## சசிகலா...

பொதுத் தேர்தலில் போட்டியிடும் திருமதி சசிகலா ரவிராஜின் வாகனம் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பிரதேசத்தில், நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேர்தல் பிரசாரத்திற்காக தனது வீட்டில் இருந்து புறப்படும்போது சாவகச்சேரி தமிழரசுக் கட்சியினரே தன் மீது தாக்குதலை மேற்கொண்டதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இத்தகைய தாக்குதல் முன்பும் இடம்பெற்றுள்ளதாகவும், இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்த சசிகலா, தாக்குதலில் ஈடுபடுவது குறிப்பிட்ட ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றுதான் சந்தேகிப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் தென்மராட்சி இலங்கை தமிழரசுக்கட்சி சாவகச்சேரி கிளைக்கு எதிராக முறைப்பாடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7,33)

## துன்னாலை...

கதிரமலை லட்சணம் (வயது-68) என்ற ஆறு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காய்ச்சல் ஏற்பட்டதாகவும் பனடோல் மாத்திரை உட்கொண்ட நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## என்னைக்...

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவிசெனவிரட்ணவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த கடிதத்தில்,

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ஹேமசிறி, ஒக்ரோபர் 31ஆம் திகதி வெளியிடப்பட்ட கடிதத்தில் தனது பாதுகாப்புப் படையின் எண்ணிக்கையை 50 இல் இருந்து 30 ஆக குறைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்ற முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 243 மற்றும் 200 மற்றும் 109 பேர் கொண்ட பாதுகாப்புக் குழுக்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு இருக்க 30 பாதுகாவலர்களை மட்டும் வழங்குவது எந்த அளவுகோலின்படி முடிவு செய்யப்பட்டது என்பது எனக்குப் புதிராக உள்ளது.

அத்துடன், ஓய்வுபெற்ற ஐந்து ஜனாதிபதிகளில் நான் தான் மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளானவர் எனவும், கொலை முயற்சியில் காயமடைந்த ஒரே ஜனாதிபதி நான் எனவும் முன்னாள் ஜனாதிபதி தனது கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு 2006 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தம்மைக்கொன்று விடுவோம் என பகிரங்க அறிக்கைகளை வெளியிட்டதாகபொலிஸ் புலனாய்வு அறிக்கைகள் மூலம் தனக்குத் தெரியப்படுத்தியதாகவும் முன்னாள் ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் 63 இராணுவ அதிகாரிகளும், 180 பொலிஸ் உத்தியோகத்தர்களும் 243 பாதுகாப்பு அதிகாரிகளும், மைத்திரிபால சிறிசேன 109 பொலிஸ் அதிகாரிகளும், கோட்டாபய ராஜபக்ஷ 25 பொலிஸ் அதிகாரிகளும், 175 இராணுவ அதிகாரிகளும் 200 பாதுகாப்பு அதிகாரிகளும் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 5647
E 3 5 3 3 0 8
அத சம்பத
E 3 3 0 8
சீட்டிழுப்பு இலக்கம் 222
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1677
J 06 26 62 67 J
Double Chance 25878

மெகா பவர்
திகதி 05/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1995
N 17 31 61 72 74
016740

லக்கி 7 VIP
திகதி 2024.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 0473
C 3 2 9 6 0 6 C

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3889
சீட்டிழுப்பு திகதி 05.11.2024
X 07 31 44 67
X 142622

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 956
மீனம் 15 29 45 61 மீனம்
38383 38

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2447
சீட்டிழுப்பு திகதி : 2024.11.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,030,060.80
24 51 55 74 X
333327
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.11.2024 வெற்றி வாரம் 355
J 4 0 1 7 2 6
71968
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25.052.616.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2621
சீட்டிழுப்பு திகதி 2024.11.05 தினம் செவ்வாய்க்கிழமை
18 31 48 74 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,994,692.80

சனிதா
திகதி 05.11.2024 வெற்றி வாரம் 4782
10 28 57 73 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,349,385.20
57114

சசிரி
வெற்றி வாரம் 551
சீட்டிழுப்பு திகதி 05.11.2024
செவ்வாய்க்கிழமை
04 12 41
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4333
சீட்டிழுப்பு திகதி 05.11.2024 தினம் செவ்வாய்க்கிழமை
07 21 23 39 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,608,296.40
177746

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 22 09 44 73 75
1797
05.11.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.554,554,897.00
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாராளுமன்றத் தேர்தல் - 2024

(யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)



2
கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்


1
கனகரட்ணம் சுகாஷ்



X


5
நடராஜர் காண்டீபன்


9
செல்வராசா
கஜேந்திரன்

இரு தேசம் ஒரு நாடு இலக்கினை அடைய
ஒற்றைத் தலைமையில் ஓரணியாவோம்!

தாயகம் – தேசியம் – சுயநிர்ணயம்

(C-109)



## UK VISA SERVICES

◆Student visa ◆Visit Visa

- 80% கட்டணக்கழிவுடன் 18 பேருக்கு மட்டுமே.
- சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்.
- மிக விரைவான செயற்படுத்தல் காலம்.
- 40 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும்.

மேலதிக விபரங்களுக்கு முன்பதிவு செய்து நேரில் வரவும்.
முன்பதிவுகளுக்கு : 071 071 6979

Winstar Consultants Pvt Ltd
45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(521)



## காணி விற்பனைக்கு

கொடிகாமம் சந்தியில் இருந்து 300 மீற்றர் பருத்தித்துறை வீதியில் 20 பரப்பு 6 குளி விஸ்தீரணம் கொண்ட தென்னங்காணி விற்பனைக்கு உண்டு.

077 436 6704
075 164 0104

(2576)


## பிரிட்டனில் குடியேற வாய்ப்பு

பல வருடங்களாக டியாகோ கார்சியா தீவில் கைவிடப்பட்டிருந்த இலங்கை ஏதிலிகள் அனைவரும் பிரித்தானியாவில் குடியேறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பி.பி.சி வெளியிட்டுள்ள செய்தியில், குறித்த தீவில் தங்கி இருந்த 60 இலங்கைத் தமிழர்கள் 3 ஆண்டுகளின் பின்னர் தற்போது பிரித்தானியாவில் தங்க அனுமதிக்கப்படவுள்ளனர்.

இந்த தீவிலிருந்து பிரித்தானியாவில் குடியேறுவதற்கு விண்ணப்பித்த முதல் குடிசனம், இலங்கைத் தமிழர்களாகக் கருதப்படுகின்றனர். (ம-7)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடியில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00- மாலை 6.00
- தரகர் தேவையில்லை

070 168 3354, 070 668 3354

(2579)



நீங்களும் விரைவில் அமெரிக்காவில்.

அமெரிக்க அதிஸ்ட விசா

நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன (07-11-2024 வியாழக்கிழமை)

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L

55000 இலவச விசாக்கள்

0768226244

V2 Travels

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| 0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675 |
| 0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322 |
| 0764550671 | 0776699892 | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | 0768226230 | 0776697960 |



## யோக்கட் கொள்வனவுகள்

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.

50/= 80/=

Happy Supermarket
உரும்பிராய்

077 121 5546 / 077 780 8030

(522)



எல்லோருக்கு யாழ்
இருப்பியல்
வையத் தலைமை கொள்


அங்கஜன்
இராமநாதன்

# சொல் வீரனல்ல செயல் வீரன்



நான் சொன்னதை செய்து முடித்தவன்:
என் செயல்தான் என் மொழி.
உங்கள் நலன் என் முன்னுரிமை,
உங்கள் ஆதரவு என் சக்தி

தபால்பெட்டி சின்னத்திற்க்கு வாக்களிப்பீர்



X

X 1

(C-108)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.